THE THANJAVUR ... LIBRARY

தமிழ் வாழ்க

துணர் ௫௨ மலர் ௧௰ ௧௧ ௧௨

தமிழ்ப்பொழில்

திருவள்ளுவர் யாண்டு ௨௰௧௰

காளயுக்தி — தை, மாசி, பங்குனி

(1979 சனவரி, பிப்ரவரி, மார்ச்சு, ஏப்ரல்)

கரந்தைத் தமிழ்ச் சங்கம்,

தஞ்சை

தமிழ்ப் பொழில்

துணர் ௫௨ உள்ளுறை மலர் ௧௰ ௧௧ ௧௨

பக்கம்

1. ஊழ் வினையும் ஆள் வினையும் 191
புலவர் கு. சின்னையன்

2. இரட்டையர் இருவரா? 199
ம. மதியழகன், எம். ஏ., எம். பில்.,

3. தன்னேரிலாத தமிழ் 206
பே. க. வேலாயுதம் பெரியார் ஈ. வே. ரா. கல்லூரி திருச்சி

4. தமிழில் உகரச்சுட்டு 216
டாக்டர். மோ. இசரயேல், மதுரை. 625021

5. தொல்காப்பியமும், சார்பெழுத்துக்களும் 222
ச. பாலசுந்தரம், துணை முதல்வர், க. பு. க.

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு உ௰கம	மலர்
௫உ	காளயுக்தி. தை, மாசி, பங்குனி 1979 சனவரி, பிப்ரவரி, மார்ச்சு, ஏப்ரல்	க௰ கக கஉ

ஊழ்வினையும், ஆள்வினையும்

(புலவர். கு சின்னையன்)

முன்னுரை:-

இன்றைய மக்களுட் பலர், 'எல்லாம் ஊழ்வினைப்படியே நடக்கின்றன' என்று கருதுகின்றார்கள். வேறு சிலர், 'முயற்சியால் வெற்றியும், சோம்பலால் தோல்வியும் தோன்றுகின்றன'', என்று கூறுகின்றனர். சமுதாயத்தில் விதி என்ற ஒன்றினைப் புகுத்தி, எதனையும் பகுத்தறிவு கொண்டு ஆராயாமல் தடுத்துவிடுகின்றார்கள். தங்கள் சீர்கேடுகளுக்குத் தாமே காரணம் என உணரமுடியாதவாறு அறிஞர்கள் மக்களை அல்லலுக்குள் ஆழ்த்திவிடுகின்றார்கள் என்று காரல்மார்க்ஸ் கூறியுள்ளார்.

திருவள்ளுவர், அறத்துப்பாலின் இறுதியில் 'ஊழ்' என்னும் அதிகாரத்தையும், பொருட்பாலில் 'ஆள்வினை' என்னும் அதிகாரத்தையும் அமைத்திருக்கின்றார். 'ஊழ்' என்பதற்கு, இருவினைப்பயன் சென்றடைவதற்கேதுவாகிய நியதி என்றும், 'ஆள்வினையுடைமை' என்பதற்கு, 'இடைவிடாத மெய்ம் முயற்சி உடையவனுதல்' என்றும், பரிமேலழகர் பொருள் கூறியிருக்கின்றார்.

இலக்கியங்களில் ஊழ்வினை:-

சங்க இலக்கியங்கள் முதல் தற்கால இலக்கியங்கள் ஈருக எல்லா நூல்களும், ஊழின் வலிமையை விளக்கிக் கூறுகின்றன உலகில் தோன்றியுள்ள பெரும்பான்மையான சமய நூல்களும் ஊழ் வலிமையை ஏற்றுக்கொள்கின்றன.

மக்கள் செய்யத்தக்க அறங்களையும், விலக்கத்தக்க மறங்களையும் விளக்கிக்கூறும் நீதிநூல் அனைத்தும், நல்வினை தீவினைகளை எடுத்துக்காட்டி, ஒழுக்க நெறியை வற்புறுத்திக் கூறுகின்றன.

''ஆற்று நீரில் மிதந்து செல்லும் மிதவை, நீர்செல்லும் வழியில் செல்வது போல், வினை செல்லும் வழியில் உயிர் செல்கின்றது என்பதைக் கண்கூடாகக் கண்டறிந்தேன்'' என்றார் கணியன்பூங் குன்றனார்

'' நீர் வழிச்செல்லும் புணைபோ லாருயிர்

முறை வழிப் படும் என்பது திறவோர் காட்சியால் தெளிந் தனம்'' என்று கூறியுள்ளார்.

மன்னர் மன்னனான தசரதனும், பெருங்குடி வணிகர் குலத்தில் தோன்றிய கோவலனும், வருந்தியிறந்தார்க்குக் காரணம், அவ்விருவரும் முற்பிறவியில் செய்த தீவினைகளே என்று. இராமாயணமும் சிலப்பதிகாரமும் இனிதே கூறுகின்றன. பக்தி நெறியில் நின்ற பட்டினத்தடிகள் 'முன் செய்ததீவினையே இங்ஙனே வந்து மூண்டது' என்று கூறியுள்ளரர் நீதி நூல்களைக் கூறிய ஔவையார்,

''செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ இருநிதியம்'' என்று கூறியுள்ளார்

அறமும், மறமும்

மக்கள் புரியும் அறச்செயல்கள், இம்மை மறுமை இன்பங்களை அளிக்கின்றன. புகழையும் போகத்தையுப் கொடுக்கின்றன. பிறப்பை ஒழிக்கின்றன ஆனால் மறச் செயல்கள் தீயை விடக் கொடியதாகும். தீயானது தன்பாலடைந்தவரைத் தான் வருத்துகின்றது; தீவினையானது அச்செயலை செய்தவனிடம் சென்று அவனை வருத்துகின்றது. தீயானது, அதனை விட்டு விலகிச் சென்றவரை வருத்தாது; ஆனால் தீவினையானது அதனை விட்டு விலகிச்சென்றாலும் அவர்களிடம் சென்று வருத்துகின்றது, எனவேதான்,

'' தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப்படும்''

என்று, திருவள்ளுவர் கூறியுள்ளார்-மேலும், உடல் நிழலை எடுத்துக் காட்டி விளக்கியுள்ளார்.

ஒருவனுடைய உடல் நிழல் தன்னுருவத்தைக் காட்டாமல் அவனுடைய அடிக்குள்ளே மறைந்திருக்கின்றது. ஒளி தோன்றும் போது அந்நிழல். நீண்டும் குறைந்தும் தன்வடிவத்தைக் காட்டி. ஒளியில்லாத போது மீண்டும் அவ்வடிக்குள்ளேயே மறைந்து. விடுகின்றது. இவ்வாறே, ஒருவன் செய்த தீவினையானது, அவனை விட்டு நீங்காமல் அவனிடமே மறைந்து நின்று. தக்க சமயம் வரும் போது வெளிப்பட்டு அவனுக்குத் துன்பத்தைக் கொடுத்து. மீண்டும் அவனிடமே மறைந்து நிற்கின்றது. இதனை,

" தீயவை செய்தார் கெடுதல் நிழல் தன்னை
வீயா தடியுறைந் தற்று" என்றார் திருவள்ளுவர்.

மந்தையில் பல்வேறு பசுக்கள் நிறைந்திருக்கின்றன. ஒரு கன்றினை அவிழ்த்து விட்டால், அது தன் தாய்ப்பசு நிற்குமிடத்தை அடைகின்றது. இவ்வாறே, ஒருவன் செய்த வினை அவன் எந்தப் பிறவியில் தோன்றியிருந்தாலும் அவனையடைகின்றது.

" பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று
வல்லதாம் தாய் நாடிக் கோடலைத் — தொல்லைப்
பழவினையும் அன்ன தகைத்தேதற் செய்த
கிழவனை நாடிக் கொளற்கு "

என்று, நாலடியாரில் பழவினை என்னும் அதிகாரத்தில் கூறப் பட்டிருக்கின்றது. எனவே தான், மக்கள் தீவினைகளை நீக்கி நல் வினைகளைப் புரிந்தால் தான், துறவறத்தின் மூலம் பிறப்பை ஒழித்து வீடுபேறடைவதற்கேதுவானவற்றைப் புரியமுடியும் என்று கருதியே திருவள்ளுவர், துறவறவியலை இல்லறவியலுக்குப்பின் அமைத்துள்ளார்.

வள்ளுவர் கூறும் துறவறம் காவியாடை உடுப்பதையோ? கண்டிகை அணிவதையோ வற்புறுத்தவில்லை. முடியை வளர்ப் பதையோ? மழிப்பதையோ எடுத்துரைக்கவில்லை. காய்கனி வகைகளை உண்ண வேண்டுமென்பதையோ? கானிலோ நீரிலோ நின்று கடுந்தவம் புரிய வேண்டுமென்பதையோ கழறவில்லை. உலகம் பழிக்கும் தீயசெயல்களை நீக்கி, எல்லா உயிரையும் தம்முயிர் போல் எண்ணி, பற்றற்று வாழும் அருள் வாழ்க்கை வழியின் மூலம் பேரின்பமடையலாம் என்பதையே எடுத்துரைக்கின்றது.

மக்களடையும் உயர்வுக்கு காரணமான முயற்சியும், தாழ்வுக் குக் காரணமான சோம்பலும் அவர்கள் முன் செய்த நல்வினை தீவினை களால்தான் தோன்றுகின்றன.

ஒருவன் அறிவுடையவனாய் இருந்தாலும் தீவினை காரண மாக, அவன் அறிவிற்றவனைப் போலிருக்கின்றான். அறிவிலி யொருவன் நல்வினை காரணமாக அறிவும் திறமும் பெற்று விளங்கு கின்றான்.

ஒருவன் நுண்ணிய நூல்கள் பலவற்றைக் கற்றிருந்தாலும், அவனுக்கு ஊழிலானாகிய பேதமை அறிவே மிகுந்து தோன்று கின்றது.

ஊழ்களில் ஒன்று வறியவனைச் செல்வந்தனுக்குகின்றது. மற்றென்று. அறிவிலாளெருவனை அறிவுடையவனுக்குகின்றது.

ஒருவன் காலமும், இடமும், கருவியும், தொழிலும் அறிந்து நற்செயலைச் செய்யத் தொடங்கினுலும், தீவினை காரணமாக நல்லவையெல்லாம் தீயவாய் மாறுகின்றன. நல்வினை காரணமாக பற்றெருவன் செய்யும் தீயவையும் அவனுக்கு நன்மை தருபவையாய்த் தோன்றுகின்றன.

ஒருவன் மிகவும் உழைத்துப் பொருளைத் தேடியிருந்தாலும், வருந்திக்காலத்தாலும், ஊழலல்லாத பொருள்கள் அவனிடம் நிலைத்திருக்காது. ஊழலாமைந்த பொருளை புறத்தே கொண்டு போய்க்கொடுத்தாலும் அஃது அவனை விட்டு நீங்காது.

ஒருவன் முயன்று கோடிக்கணக்காகப் பொருளைச் சேர்த்து வைத்திருந்தாலும், அச்செல்வத்தை அனுவித்தற்குரிய நல்வினையிருந்தாலன்றி அவன் அனுபவிக்க முடியாது.

"வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்த லரிது" என்றுர் திருவள்ளுவர்.

ஒருவனுக்குத் தோள் வலிமையைவிட பண வலிமையைவிட, படை வலிமையைவிட, சிறந்த வலிமையுடையதாக விளங்குவது ஊழ் வலிமையாகும். இவ்வலிமை இல்லாத ஒருவன் வேறு வலிமைகளை உடையவனுக விளங்கினுலும், அவ்வலிமைகளை ஊழ்வலி தடுத்து நிறுத்துகின்றது.

"ஊழின் பெருவலி யாவுள மற்றென்று
சூழினும் தான் முந்துறும்" என்றுர் திருவள்ளுளர்.

இக்கருத்தையொட்டியே,

"ஆவது ஆகுங்காலத் தாவது அழிந்து சிந்திப் போவது அயலே நின்று போற்றினும் போதல் செய்யும்" என்று கம்பர் கூறியிருக்கின்றுர். மக்களடைந்து வரும் சிற்சில நோய்கட்கும்" ஊழ்வினையே காரணமாக இருக்கின்றது.

நோயும் மருந்தும்

'மருந்து' என்னும் அதிகாரத்திற்குத் தொடக்கவுரை எழுதிய பரிமேலழகர், 'பழவினையாலும் காரணங்களாலும் மக்கட்கு வாதம் முதலிய பிணிகள் வரும், அவற்றுள் பழவினையால் வருவன. அவற்றின் கழிவின்கணல்லது தீராமையின் அவையொழித்து ஏனைக்காரணங்களால் வருவனவற்றைத் தீர்க்கும் மருந்தின் திறம்

கூறுகின்றார்'' என்றெழுதியுள்ளார், 'திருந்திய யாக்கையுள் மருத்துவன் ஊட்டிய மருந்துபோல் மருந்தாக ..... (பாலைக்கலி 17) என்று, கலித்தொகையில் கூறப்பட்டிருக்கின்றது. இதற்கு,

''நல்வினையால் திருந்திய யாக்கையின் கண்ணே, மருத்துவன் நுகர்வித்த மருந்துபோல நல் மருந்தாகி'' என்று நச்சினார்கினியர் பொருள் எழுதியிருக்கின்றார். எனவே, வினை வயத்தால் நோய் தோன்றும் என்பதையும் இதற்கு மருத்துவன் கொடுக்கும் மருந்து பயனளிக்காதென்பதையும், ஒருவனுக்குத் தீவினை நீங்கும் காலத்தில் கொடுக்கப்படும் மருந்துதான் பயனளிக்கும் என்பதையும் நாம் நன்கு அறிந்து கொள்கின்றோம். இலக்கியங்களிலுருந்து அறிந்து கொள்ளளும் இவ்வுண்மையை, நாம் உலகியலிலிருந்தும் உணர்ந்து கொள்கின்றோம்.

உலகியற் காட்சி :

சிலர், தீராத நோயுடன் விளங்கி, துன்புறுத்துகின்றார்கள். அத்தகைய நோயுற்ற வேறு சிலர், சிறந்த மருத்துவர்களின் கட்டளைக்கேற்ப சிறந்த மருந்துகளை அருந்தியும் நோயுடையவர் களவே வாழ்கின்றார்கள்.

ஒருவர் புல் தடுக்கி வீழ்ந்து பெறுசின்றார். மற்றொருவர் உடலில் துப்பாக்கிக்குண்டுகள் பாய்ந்திருப்பதனை எடுப்பதற்காகச் சிகிச்சைப் பெறுகின்றார். முடிவில் புல் தடுக்கி வீழ்ந்தவர் நலம் பெறாமல் இறந்துவிடுகின்றார். துப்பாக்கியால் சுடப்பட்டவர் பிழைத்துக் கொள்கின்றார். இவ்விரு வேறுநிலைகட்கும் வினைப் பயனையே நாம் காரணமாகக் கருதுகின்றோம்.

ஆள் வினையின் ஆற்றல் :-

ஒருவன் தான் செய்து முடிக்க விரும்பும் செயலின் அருமையை நினைத்து சோர்வடையக்கூடாது, முயன்றால் முடியாததில்லை, ஒருவனிடம் அமைந்துள்ள முயற்சி செல்வத்தை உண்டாக்கும்; சோம்பல் வறுமையை உண்டாக்கும்.

செல்வத்தைத் தரும் திருமகள் முயற்சி உடையவனிடத்தில் தங்கியிருக்கின்றாள்; வறுமையைத் தரும் மூதேவி சோம்பலுடையவனிடத்தில் தங்கியிருக்கின்றாள்.

ஒருவனுக்கு நல்வினை இல்லாமலிருப்பது குற்றமாகாது; ஆனால், அவன் முயற்சி இல்லாதவனாக இருப்பதே குற்றமாகும்.

"பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து
ஆள்வினை யின்மை பழி" என்றார் திருவள்ளுவர்.

ஒருவனுக்கு ஊழ்வினை உறுதுணையாக அமையாவிட்டாலும் அவன் மேற்கொள்ளும் முயற்சி அதற்கேற்ற பலனைத் தருகின்றது.

முயற்சி உடையவர்கள், அகப்பகை, புறப்பகைகளை மட்டுமல்லாமல் ஊழ்வினையையும் புறங்காட்டி ஓடச் செய்வார்கள்.

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்" என்றார் திருவள்ளுவர்.

ஊழ்வினை காரணமாக வருந்துவோர் அதனைக்கண்டு மனம் கலங்காமல், செயல் புரிந்தால் ஊழையும் வெல்லலாம் என்பதனை மக்கட்கு அறிவுறுத்துவதற்காகவே, ஊக்கமுடைமை, மடியின்மை ஆள்வினையுடைமை, இடுக்கணழியாமை என்னும் நான்கு அதிகாரங்களில் முயற்சியின் இன்றியமையாமையை வள்ளுவர் வற்புறுத்திக் கூறியுள்ளார்.

ஊழ்வினையும் ஆள்வினையும் :-

நல்ல பாம்பு பிறரைக்கொல்லும்படியான கொடிய நஞ்சினைக் கொண்டிருக்கின்றது. அப்பாம்பு, பிறரைக் கண்டால் சீறி, படமெடுத்துக் கொண்டு கடிக்க வருகின்றது. ஆனால், அப்பிடாரனைக் கண்டதும் அஞ்சி ஓடுகின்றது. காரணம் என்ன ?

பாம்பைக் கண்டதும் பிறர் பயந்தோடுகின்றார்கள்; ஆனால் பாம்புப் பிடாரனோ பிறரைப் போல் பயந்தோடுவதில்லை; அஞ்சா நெஞ்சுடன் அதனை விரட்டிக்கொண்டு செல்கிறான், அப்பாம்பு வளைக்குள் சென்றாலும் சோம்பலின்றி வளையை வெட்டி அதனைப் பிடிக்கின்றான்; பிடித்ததும் அதன் நச்சுப் பற்களை ஒடிக்கிறான்; அதன் பின் அதனைத் தன் வயமாக்கிக் கொண்டு ஆட்டுவிக்கின்றான் எனவே பாம்பை ஒத்தது விதி, பிடாரனை ஒத்தது ஆள்வினை என்னும் உண்மையை நாம் அறிந்து கொள்கின்றோம்,

விதியும் மதியும் :

'விதியை மதியால் வெல்லலாம்' என்பது பழமொழி. மார்க்கண்டேயன், விதி வலியை மதி வலியால் வென்றிருக்கின்றான்.

அடிமையும் மிடிமையும் அடைந்து துன்புற்ற ஆபிரகாம்லிங்கன் முயற்சி காரணமாக அடிமை வாழ்வையும் மிடிமை வாழ்வையும் அகற்றி அமெரிக்க ஜனாதிபதியாகியிருக்கின்றான். இவ்வாறே, பலர். பல்வேறு துறைகளில் வருந்தி உழைத்து முன்னேறியிருக்கின்றார்கள்.

மழை பெய்வதையும், காற்றடிப்பதையும் வெயிலடிப்பதையும் நம்மால் தடுத்து நிறுத்தமுடியாது. ஆனால், நம் முயற்சியால் மழைநீர் நம்மீது விழாமல் தடுக்கின்றோம். இவ்வாறே காற்றையும் வெயிலையும் தடுத்துக் கொள்கின்றோம். இவ்வாறே, ஊழ்வினை செயல்படுவதை நம்மால் தடுக்க முடியாவிட்டாலும், அதனை, மாற்றுவதற்கு முயன்று வெற்றி பெறுகின்றோம்.

"பெருமையும் சிறுமையும் தான் தரவருமே" என்றும், தன்னைத். தலையாகக் கொள்வானும் தான் ' என்றும் நீதி நூல்கள் கூறுகின்றன. ஒரு செயலைச் செய்து முடிக்கஎண்ணியவர்கள் அதனைச் செய்து முடிக்க வேண்டுமென்ற மனவலிமையுடையவராயிருப்பின் அச்செயலைச் செய்து முடிப்பார்கள்.

" எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின் " என்றார் திருவள்ளுவர்.

ஒருவன் ஒரு காரியத்தைச்செய்துமுடிக்க எண்ணுவானாயின் அதற்கு அடிப்படையாய் இருப்பது உடல் வலிமையல்ல; படை வலிமையல்ல ;பண வலிமையுமல்ல; உள்ளத்தின் வலிமையேயாகும்

முதிர்ந்த வயதும் மெலிந்த உடலும் படைத்த திருநாவுக்கரசர் 'நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்' என்று உரிமைக்குரலெழுப்பி, படைபலம் மிக்க பல்லவ மன்னனை எதிர்த்து வெற்றிபெற்றார் இவ்வாறே, காந்தியடிகள் ' வெள்ளையனே வெளியேறு ' என்று கூறி, வெள்ளையராட்சியை எதிர்த்து வெற்றி பெற்றார். இவ்விருவர்க்கும் அடிப்படையாக அமைந்த பலம் ஆத்மீக பலமாகும்.

இராமரும், தருமரும், படைபலமிக்க இராவணனையும், எல்லா வலிமைகளையும் பெற்றிருந்த துரியோதனதியரையும் அறத்தின் வலிமையைக் கொண்டு வென்றிருக்கின்றார்கள்.

மக்கள் மேற்கொள்ளும் முயற்சி அறவழியில் அமைந்திருந்தால் அம்முயற்சி அவர்கட்கு எளிதில் வெற்றியைத் தேடித் தருகின்றது. ஆனால் மறவழியில் மேற்கொள்ளும் முயற்சி எளிதில் வெற்றியைத் தராதது மட்டுமில்லாமல் தோல்வியையே தருகின்றது

இயேசுவும், முகமது நபியும், புத்தரும், வர்த்தமானரும் மகாத்துமா காந்தியும், விவேகானந்தரும் பிறரும் அறநெறியில் முயன்று வெற்றி பெற்றிருக்கின்றார்கள். கஜினி முகமதும், நெப்போலியனும், ஹிட்லரும் பிறரும் மறநெறியில் நின்று தோல்வியடைத்திருக்கின்றார்கள் இவ்வரலாறுகள் மேலே கூறிய உண்மை நிலையை நமக்கு விளக்கிக் காட்டுகின்றனர். எனவே, மக்கள் முயற்சியுடையவர்களாயிருத்தல் வேண்டும். 'இல்லை' என்று கூறி, யாரும் சோப்பியிருத்தல் கூடாது. உழைப்பதற்கேற்ற உடலிருக்கிறது; வேலையிருக்கின்றது. நிலமிருக்கின்றது. இங்ஙனம் எல்லாமிருந்தும் இல்லை என்று கூறி சோம்பியிருப்பவர்களைப் பார்த்து நிலம் எனனும் பெண்ணணவள் சிரிக்கின்றாள்.

" இலமென் றசைஇ யிருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும் " என்றார் திருவள்ளுவர்

இறைவன், முயற்சி உடையவர்கட்கே துணை புரிகின்றான் அவன் யாரையும் இரந்துண்ணுமாறு படைக்கவில்லை. அவ்வாறு இரந்து தான் வாழவேண்டுமென்று அவன் படைத்திருப்பானேயானால், அவ்விறைவனே தெருத்தெருவாக ஊர் ஊராகச் சென்று அலையட்டும்; வீடு வீடாகச் சென்று இரக்கட்டும்; அதனால் தோன்றும் இழிவை அடையட்டும். அழியட்டும்; ஆனால் மக்கள் யாரும் அங்ஙனம் ஏற்க வேண்டாம். அழியவேண்டாம்.

" இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுகவிவ் வுலகியற்றி யான் " என்று திருவள்ளுவர் கூறியிருக்கின்றார்.

முடிவுரை :-

" விதி என்ற ஒன்று சமுதாய வளர்ச்சியைத் தடுக்கவில்லை, அறியாமையே அல்லல் அளிக்கின்றது. அதை நீக்கக் கல்வி வேண்டும் " என்று கூறியுள்ளார் பேரறிஞர் காரல்மாக்ஸ். ஒருவன், தான் பிறந்த குடியை உயர்ந்த வேண்டுமென்று கருதி முயல்வானேயானால், அவனுக்குத் தெய்வம் தன் ஆடையைச் சுருட்டிக்கட்டிக் கொண்டு அவனுக்கு உதவி புரிய முன் வருகின்றது.

" குடி செய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான் முந்துறும் " என்று திருவள்ளுவர் கூறியிருக்கின்றார். மக்களின் வாழ்க்கையில் முயற்சி என்னும் பண்பு அமையவில்லை என்றால் அவ்வாழ்க்கை வேரற்ற மரம் போல் அழிந்துவிடும்.

எனவே. இயற்கையாகத் தோன்றும். ஊழ்வினையை, செயற்கையால், தோன்றும் முயற்சியால், மாற்றலாம், மறைக்கலாம்; நீக்கலாம் என்பதே திருவள்ளுவரின் நோக்கமாகும். எனவே ஊழ்வலியுடையவர்களும் அடிப்படையாயிருக்கும் பண்புகளை மேற்கொண்டொழுகினால் வாழ்க்கையில் வெற்றியடைய முடியும். "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்பது பழமொழி.

இரட்டையர் இருவரா?

(**ம. மதியழகன்**, எம். ஏ., எம். பில்.)

கி. பி. பதினான்காம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் சோழ நாட்டு ஆடுதுறைக்கருகில் இலந்துறையில் தோன்றியவர்கள் இரட்டைப் புலவர்கள். இவர்களுள் ஒருவர் குருடர் மற்றொருவர் முடவர். குருடர் முடவரைத் தோளில் சுமந்து பல இடங்கட்கும் செல்வர் இவர்கள் பல தனிப்பாடல்களையும் கலம்பகம், உலா போன்ற சிற்றிலக்கியங்களையும் இயற்றியுளனர். இவையே இரட்டையரைப் பற்றிப் பொதுவாக இன்றுவரை பயிலப்பட்டு வருகின்ற வரலாறாகும். இவர்கள் வாழ்க்கை வரலாற்றில் பல கற்பனைக் கதைகள் கலக்கப்பட்டிருப்பினும் அடிப்படை செய்தியான 'இரட்டைப் புலவர்கள் இருவர்' என்ற வரலாறு எந்த அளவிற்கு உண்மையானது என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கற்பனை வரலாறு :-

பல துறைகளிலும் மேம்பட்டு விளங்கிய தன் நிகரில்லாத் தமிழரின் வாழ்வு முறையான வரலாறாக எழுதி வைக்கப்படாமையால் மாண்பு இழந்தது. மயங்கும் வகையில உழன்றது, பிற்காலத்தில் தமிழனின் வரலாற்றை அறிய வேண்டும். அதனைப் பிறர்க்கு உணர்த்த வேண்டும் என்ற உணர்வுகள் எழுந்தன. வரலாற்றைப் புரட்டிப் பார்த்தார்கள். முறையான வரலாறு கிட்டவில்லை பெயர் தெரியாதவர் பலர்; பெயர் தெரிந்தாலும் காலம் கணக்கிட முடியாதவர் பலர்; காலம் புலப்பட்டாலும் வரலாறு வெளிப்படாதவர் பலர். இவ்வாறு கண்டனர்; இன்னல் பல உற்றனர். தாமே அவர்கட்கு வரலாற்றை உருவாக்க வேண்டும் என்ற உயர் நோக்கங்கொண்டு, ஓரளவு உண்மையைக் கலந்து கற்பனைகள் பல புனைந்து தம் கால மக்களின் மனநிலைகட்கேற்ப கதைகள் சில

தொகுத்து வரலாறு என்ற பெயரால் புராணத்தை எழுதி வைத்தார்கள். இதனால், தமிழ் வரலாறும், தமிழ் இலக்கிய வரலாறும் கற்பனை என்ற படிகளிலேயே தவழ்ந்து வரலாயின.

அங்ஙனம் உண்மை சில கலந்த கற்பனை பல நிறைந்த புராணக் கதைகளுள் இரட்டைப் புலவர்களது வரலாறு மடங்கும். கீழ்வரும் டி. வி. சதாசிவ பண்டாரத்தாரின் கூற்றுக்கள் இக்கருத்திற்கு அரணாக அமைகின்றன.

‘சென்ற பத்தொன்பதாம் நூற்றுண்டில் தமிழ்ப்புலவர்களின் வரலாற்றை முதலில் எழுதியவர்கள் படிப்போர்க்கு வியப்பையும் வினோதத்தையும் விளைவிக்கும் பொருட்டு ஆதாரமில்லாதனவும் உண்மையில் நிகழாதனவும் பொருத்தமில்லாதனவுமாகிய பல செய்திகளைப் புலவர் வரலாற்றில் கற்பனையாக எழுதி வெளியிட்டுவிட்டனர். பின் வந்தோர் அவற்றை ஆராய்ந்து பாராமல் அப்படியே ஏற்றுக் கொண்டு எழுதியும் பேசியும் வருவாராயினர். இந்நிலையிற்றான் தமிழ்ப்புலவர்களின் வரலாறு இன்றுமுள்ளது. ஆகவே தமிழ்ப் புலவர்களின் வரலாறு இன்றுமுள்ளது ஆகவே புலவர் பெருமக்களாகிய இரட்டையர்களின் வரலாற்றில் அத்தகைய ஆதாரமற்ற செய்திகள் காணப்படுவதில் வியப்பொன்றுமில்லை’. 1

இரட்டையர் இருவர் என்பதற்கு மூன்று சான்றுகள் தான் தென்படுகின்றன. அவையாவன :-

1) இரட்டையர் இருவர் என்று மரபு வழிப் பயிலப்பட்டு இன்றுவரை நிலைத்திருப்பது.
2) அவர்களுடைய தனிப்பாடல்கள் இருவர் கூற்றுக்களாக அமைந்திருப்பது
3) அவர்தம் இலக்கியங்களில் பன்மைச் சொற்கள் பயின்று வருவது.

அதிசயப் பிறவிகள் :-

தமிழ் இலக்கிய வரலாற்றில் முடவர் புலவராயும் புரவலராயும் குருடர் புலவராயும் வாழ்ந்திருப்பதை உணரலாம். முடத்தாமக் கண்ணியார் என்ற சங்ககாலப்புலவர் பொருநராற்றுப் படையும் முடத்திருமாறன் என்ற புரவலன் நற்றிணையில் சில பாக்களையும் (105, 228) பாடியுள்ளனர். பிற்காலத்தில் (கி. பி. 1654) கண்களற்ற அந்தகக்கவி வீரராகவ முதலியார் பல சிற்றிலக்கியங்களைப் படைத்துள்ளார்.

ஆனால் குருடர்-முடவராக ஒன்றாக இணைந்து தரணியெங்கும் திரிந்து தலங்கள் பல கண்டு ஒருமித்த கருத்துடைய ஒரு பாடலை இருவருமாகப் பாடி 'இரட்டையர்' எனும் இன்பெயர் பெற்றவர் போல் எவருமிலர்.

இரட்டையரின் இயற்பெயர் என்னவென்பது தெரிந்திலது. இரட்டையர் பற்றியும் அவர்தம் பாக்கள் பற்றியும் குறிப்பிடும் தொகை நூல்களுள் ஒன்றான தமிழ் நாவலர் சரிதை மட்டும் இரட்டையரை முதுசூரியர் இளஞ்சூரியர் என்ற தனிப்பெயரால் சுட்டுகின்றது2 இரட்டையர் என்போர் இருவர் என்பதை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு அடையாளப் பெயராகத்தான் இவ்விரு பெயர்களும் இடப்பட்டனவேயன்றி வேறு சான்றுகள் கிடையா.

இருவர் பாடும் மரபு :-

தமிழ் இலக்கிய வரலாற்றில் இருவர் கூற்றாகவோ இருபுலவர் இணைந்தோ பாடி, பாடிய பாடல்கள் மிகக் குறைவு. சங்க காலத் பாரியை இழந்த மகளிருவர்,

'அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில்
எந்தையு முடையம் எம்குன்றும் பிறர் கொளார்' 3

என்றிணைந்து பாடியுள்ளார்

இடைக்காலத்தில், கம்பரின் மகன் அம்பிகாபதி சோழன் மகள் அமராவதியைக் கண்டு,

இட்டடி நோவ எடுத்தடி கொப்பளிக்க
வட்டில் சுமந்து மருங்கசைய'

என்று இரண்டடி பாட, கம்பர் தன் மகனைக் காக்கும் பொருட்டு,

'கொட்டிக்
கிழங்கோ கிழங்கு என்று கூறுவாள் நலவில்
வழங்கோசை வையம் பெறும்

என்று பின்னிரணடடிகள் பாடி மகனைக் காத்த நிகழ்ச்சியுண்டு. 4

பிற்காலத்தில் ஒட்டக்கூத்தர் பாதிபாட, புகழேந்தியும், சோழனும் குயவனும் அம்பட்டப் புலவனும் மீதியை முடித்ததாகத் தனிப் பாடல்கள் காணப்படுகின்றன.5 இவ்வாறு ஓரிரு பாடல்களே இருவரால் ஒரே கருத்தமைய பாடப் பெற்றதாகக் காண முடிகிறது. ஆனால் இரட்டையரால் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட பாடல்கள் இருவர் பாடியதாக உள்ளன.

இருவர் கூற்று?

இரட்டையரின் தனிப்பாடல்களைப் பிறபுலவர்களின் பாடல்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது இரட்டையரின் பாக்கள் இருவரால் பாடப்பெற்றனவா? என்ற ஐயம் எழுகின்றது.

“ வேயின்ற முத்தர்தமை வெட்டினனே இடையன்
தாயீன்ற மேனி தயங்கவே ''

என்று ஒருவர் பாட மற்றொருவர்

‘ ....பேயாகேள்
எத்தனை நாள் என்றே இடறுவார் பாற்குடத்தை
அத்தனையும் வேண்டுமவர்க்கு ’ 6

என்று விளித்துக்கூறுவதாக இரட்டையர் பாடல் அமைந்துள்ளது இதுபோன்ற பாடல்களில் விளிக்கப் பெறுவதை வைத்து. இரட்டையர் இருவர் எனலாம். ஆனால் வேறு சில புலவர்கள் இந்த வடிவத்திலேயே ஒரு புலவர் இருவர் கூற்றாக அமையுமாறு விளிக்கும் பாடல்களை இயற்றியுள்ளனர்.

“ தில்லைக் காவுக்குள் சிதம்பரனார் ஆட்டைனெடுத்து
இல்லைக் கானென்று மழுவெய்தினார் - சொல்லக்கேள்
மெய்யிலே கண்டேன்யான் மீண்டுங்கேள் ஆயனுமே
நெய்யிலே கையிட்டானே ''7

என்று காளமேகப் புலவரும்,

“ வாதக்கோன் நாளையென்றான் மற்றைக்கோன் பின்னையென்றால்
ஏதக்கோன் யாதேனும் இல்லையென்றான் - ஓதக்கேள்
வாதக்கோன் சொல்லதிலும் மற்றைக்கோன் சொல்லதிலும்
ஏதக்கோன் சொல்லே இனிது '' 8

என்று ஔவையாருமபாடியுள்ளனர்,

இரட்டையர் பாடல்களில் ஒருவர் கேள்வி கேட்டு மற்றொருவர் பதில் கூறுவது போல அமைந்துள்ள பாடல்களும் உண்டு.

“ மன்னுதிரு வண்ணமலைச் சம்பந் தான்டாற்குப்
பண்ணுதலைச் சவரம் பண்ணுவதேன் - மின்னின்
இளைத்த இடைமாதர் இவன்குடுமி பற்றி
வளைத்திழுத் துக்குட்டா மலுக்கு '' 9

என்ற பாடல் வினவிடை முறையில் அமைந்துள்ளது.

இப்பாடலைப் போலவே வினவும் விடையுமாக வசைக்கவி காளமேக மும் பாடியுள்ளார். அப்பாடல்,

"சீரங்கத் தாரும் திருவானைக் காவாரும்
போரங்க மாகப் பொருவதேன் - ஓரங்கள்
வேண்டா மீதென்ன விபரம் தெரியாதோ
ஆண்டானும் தாதனுமா னல்" 10 என்பதாகும்

ஒரு புலவர் மூன்று பெண்கள் கூற்றாக அம்மானைப் பாடல்களைப் பாடியிருத்தல் போல் தனிப்பாடல்களும் இருவர் உரையாடுவது போலவும், வினவிடை முறையிலும் ஒரே புலவராகப் பாடப் பெற்றிருக்கலாம். எனவே பாடல்களைக் கொண்டு இருவர் என்று முடிவு செய்வது வீண் முயற்சியாகும்.

பன்மைச்சொல் :-

இரட்டையரின் தனிப் பாடல்களில் இருவர் பாடினர் என்பதற் கேற்பப் பன்மைச் சொற்கள் அமைந்துள்ளனவே என்றுங் கருதலாம் தனிப் பாடல்களேயன்றி இரட்டையரின் சிற்றிலக்கியங்களிலும் இப்பன்மைச் சொற்களைக் காணலாம். தில்லைக் கலம்பகக் காப்புச் செய்யுளில்,

" அல்லைப் பொருவு மணிமிடற்று எம்ஐயனுறை
என்றும், திருவாமாத்தூர்க் கலம்பகக் காப்புச் செய்யுளில்

"கஞ்சநாண் மலர்கொண்டேத்தி கலம்பகம் செய்வோம் யாமே"
என்றும் பாடியுள்ளனர்.

புலவர்கள் தம்மைத் தன்மைப் பன்மையில் கூறுதல் மரபு. இதற்கு எண்ணற்ற பல பாடல்களைச் சான்று காட்டலாம். கம்பர் கடவுள் வாழ்த்தில் "தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே" 11 என்றும் புகழேந்திப் புலவர்,

"வெள்ளமே உன்றனை நாம் வென்றோமே" 12
என்றும் காளமேகப் புலவர்,

" நீரோ பிறவா நெறி காட்டியார் எமக்கு "
என்றும் குறித்துள்ளார்.

இதனை நோக்குமிடத்து, புலவர்கள் தம்மை, தன்மைப் பன்மைக் கூற்றுக்களில் கூறிக் கொள்ளுவது மரபு என்பதும் அவ்வாறே இரட் டையரும் கூறியிருக்கலாம் என்பதும் புலனாகின்றன.

எவ்வாறு பாடினர் :-

இரட்டையர் தனிப்பாடல்களையன்றித் தில்லைக்கலம்பகம் திருவாமாத்தூர்க் கலம்பகம் ஏகாம்பரநாதருலா முதலிய சிற்றிலக்கி

யங்களையும் இயற்றியுள்ளனர் இரட்டையர் என்போர் இருவர் என்றால், சிற்றிலக்கியங்களை எவ்வாறு பாடினர்? என்ற ஐயம் எழுதல் இயற்கை. உலாவை ஒருவரே பாடினரா? ஒவ்வொரு கண்ணியாக இருவரும் மாறி மாறி பாடினரா? கலம்பகங்கள் இரண்டுக்கும் இருவராலும் பாடப்பெற்றதா? ஒவ்வொரு பாடலாக வரிசையாக இருவராலும் பாடப்பெற்றதா? என்ற வினாக்கள் எழுகின்றன,

'நாணென்றால் நஞ்சிருக்கும் நற்சாபம் கற்சாபம்
பாணந்தான்'

என்று இரட்டையர் பாட மீதியைக் காளமேகம் பாடியதாகத் தனிப் பாடல் திரட்டு கூறுகின்றது 14. விநோதரசமஞ்சரி என்ற தொகை நூல் ஆரூர் கோவில் சுவரில், 'நாணென்றால் நஞ்சிருக்கும்' என்ற பாடலில் பாதியை எழுதி வைத்துச் சென்றவர் ஒரு வித்துவான் என்றும் மீதியைக் காளமேகம் நிரப்பினார் என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது 15. தனிப்பாடல் திரட்டு இரட்டையர் என்று கூறு வதை விநோதரசமஞ்சரி ஒரு வித்துவான் என்று குறிப்பிட்டிருப்பது இரட்டையர் ஒரு புலவராக இருக்கலாமோ என்ற ஐயத்தை மேலும் உறுதி செய்கிறது.

இரட்டையருள் குருடர் முடவரைத் தோளில் சுமந்து சென்று தலங்கள் பல கண்டு, வள்ளல் பலர் நாடிப் பரிசில் பெற்றுத்திரிந் தனர் என்பது வரலாறு. வாலிப வயதினரான சிவாபத விர்தயர் நன் குழந்தையான ஞானசம்பந்தரைப் பல தலங்கட்கும் தூக்கிச் சென்றார் என்ற வரலாறு ஏற்றுக் கொள்ளத்தக்கது. ஆனால் ஒத்த வயதினரான ஒருவரை மற்றொருவர் பொதிபோல சுமந்து பல இடங்கட்கும் சென்றனர் என்பது இவர்கள் பாடல்களைப் பரப்பு வதற்குச் சொல்லப்பட்ட புனைந்துரைக் கதையாகவேதோன்றுகிறது

இரட்டையர் சென்ற நாடுகள், ஊர்கள்

தொண்டை நாடு காவித்தண்டலம், காஞ்சி, மாங்காடு.
சோழநாடு இலந்துறை, தில்லை, ஆரூர், நாங்கூர்.
நடுநாடு திருவண்ணாமலை, திருமாத்தூர், வக்கபாகை.
பாண்டியநாடு வேய்வனம், மதுரை.
கொங்குநாடு செங்குன்றம்.

இவ்வளவு நாடுகளையும் ஊர்களையும் உடலுறுப்புக் குறைவு பெற்ற இருவருள் ஒருவரை மற்றொருவர் சுமந்து சென்று திரும்பி யிருப்பர் என்பது நடைமுறைக்கு ஒவ்வாத செய்தியாக உள்ளது.

இரட்டையரின் இளமைப்பருவம் தரணியெங்கும் சென்று தமிழ்ப்பாக்கள் புனைந்ததையும் கூறிய கற்பனை வரலாற்றில் அவர்களின் இறுதி வாழ்வு பற்றிய செய்தி கிடைக்கவில்லை. ஒருவரின்றி மற்றொருவரால் வாழ முடியாது என்னுமளவுக்கு அவர்கள் வாழ்வு பின்னிப்பிணைந்துள்ளது. ஒருவர் குருடர். மற்றொருவர் முடவர்? எங்குச் செல்லினும் இருவரும் இணைந்தே செல்வார்கள் என்ற செய்திகளை ஏற்றுக்கொண்டால் கீழ்க்கண்ட ஐயங்கள் எழுகின்றன. ஒருவர் முதலில் இறந்தார் என்றால் மற்றொருவர் எப்படி வாழ்ந்தார்? இருவரும் இணைந்தே இறந்தனரா? இருவரில் ஒருவர் இறந்தபோது அவரைப்பற்றி மற்றொருவர் பல பாடல்கள் பாடியிருக்கவேண்டும்? அப்பாக்கள் எங்கே?

மேற்கூறிய கருத்துக்களை ஆழ்ந்து சிந்திக்கும்போது, இரட்டையர் இருவரல்ல என்ற எண்ணம் முகிழ்க்கின்றது. மேலும், தெ.பொ.மீ. அவர்கள், 'இரட்டையர்' எனும் பெயர் 'இரட்டியார்' போன்று ஒருவரின் குலப்பெயரோ என்பது ஆராய்தற்குரியது 16. என்று கூறியிருப்பது இரட்டையர் இருவர் என்ற முடிவு வலிவிழந்து இரட்டையர் என்பார் ஒரு புலவராக இருக்கலாம். என்ற கருத்துக்கு அரண் செய்வதாய் அமைந்துள்ளது.

(எம்.பில். ஆய்வின் ஒரு பகுதி)

மேற்கோள் குறிப்புகள் :—

1 தமிழ் இலக்கிய வரலாறு, டி. வி. சதாசிவ பண்டாரத்தார், 1955, பக் 62 (13, 14, 15ஆம் நூற்றாண்டு)
2 தமிழ் நாவலர் சரிதை, கழக வெளியீடு பா. 116. 1949
3 புறநானூறு, சங்க இலக்கியம் வையாபுரிப் பிள்ளை பதிப்பு (இரண்டாம் பகுதி) 1967 பா. 1625.
4 தனிப்பாடல் திரட்டு, கழக வெளியீடு (முதற்பகுதி) 1969, பா. 227.
5 தனிப்பாடல் திரட்டு, பா. 190 191 194 176
6 தனிப்பாடல் திரட்டு. பா. 572.
7 தனிப்பாடல் திரட்டு, பா. 486
8 தனிப்பாடல் திரட்டு, பா. 85
9 தமிழ் நாவலர் சரிதை, பா. 111
10 தனிப்பாடல் திரட்டு. பா. 423
11 கம்பராமாயணம், தற்சிறப்புப் பாயிரம். பா. 1
12 தனிப்பாடல் திரட்டு, பா. 199
13 தனிப்பாடல் திரட்டு, பா- 352
14 தனிப்பாடல் திரட்டு, பா. 575
15 விநோதரசமஞ்சரி, வீராசாமி செட்டியார் 1958 பக். 361
16 தில்லைக்கலம்பகம், த. சே. உமாபதி ருத்திரா பதிப்பகம். 1958 சிறப்புரை தெ. பொ. மீ. பக். 9

தன்னேரிலாத தமிழ்

பே. க. வேலாயுதம்
(பெரியார் ஈ. வெ. ரா. கல்லூரி, திருச்சி)

தமிழர்களின் தலையாய சிறப்பு அவர்களுடைய மொழியமைப்பு அடுத்தது அவர்களுடைய தெய்வ அமைப்பு. மூன்றாவது அவர்களுடைய இலக்கிய அமைப்பு.

ஈண்டுத் தமிழ்மொழியமைப்பை மிகச் சுருக்கமாக ஆராய்வதே நமது நோக்கம். விரிவாக நாம் ஆராயவில்லையாதலின் பிறமொழிகளோடு தமிழுக்குள்ள தொடர்பினை உய்த்துணரும்படி குறிப்பாகவே சுட்டிச் செல்கின்றோம்.

'வடமொழியும் தென்மொழியும் தொடர்பற்றவை; வெவ்வேறு இனமக்களுடையவை' என்னும் ஒரு மாயத்தோற்றம் இன்றைய மொழி நூலார் கண்முன் காட்சி அளிக்கிறது. ஊறுசெய்யும் இக் காட்சி ஒழிந்து உலகை இணைக்கும் இனிய காட்சி புலப்பட வேண்டும். உலக மொழிகளெல்லாம் ஒரு மரத்தின் கிளைகளும் விளார்களுமே என்னும் உண்மை விளங்க வேண்டும். அந்த அடி மரம் மறைந்த குமரிக்கண்டத்தேதான் உள்ளது என்ற அறிவு வந்து விட்டால் தமிழின் பெருமையும் தமிழனின் கூரிய மதிநுட்பமும் உலகத்தார்க்குச் சொல்லாமலே விளங்கும். இந்திய மக்கள் இணைந்து வாழ்வர். உலக மக்கள் ஒரே குடும்பத்தினர் என்ற உணர்வு உவகைதரும். மொழியாலும் சமயத்தாலும் ஏற்பட்ட சிக்கல் தீரும்; பிணக்கு அழியும்.

இனி ஆய்வில் புகுவோம்

தென் தமிழும், வட தமிழும்

கூத்தநூல் சூத்திரங்கள் :—

தொல்காப்பியத்திலும் மிகப் பழையதாகக் காட்சியளிக்கும் கூத்தநூல் நம் சிந்தனையைத் தூண்டும் வகையில் மூன்று சூத்திரங்களைக் கொண்டுள்ளது. அவை

வட தமிழ், தென் தமிழ்

"அப்பால ஆம்மொழி அரன்உடு வைக்கண்
வட்டமிழ் தென்தமிழ் வளம்பெறும் சூக்கே"

(கூத். தாள்நூல்-48)

வடதமிழ்

"அஇஉண் ட்ருலுக் ஏஓங் ஐஔச்
உறயவரட் லண்சம ஞணனம் ஜபச்கட
தஷ்ஜப கடதஸ் கபசட தங்கப
இஸஷ ஸர்உறல்என ஈர்ஏழு சூக்கம்
வலத்துடி வடதமிழ் விளக்கரு என்ப"
(கூத். தாளநூல்-49)

தென்தமிழ்

"அஇஉம்ஐ ஓங்எய் ஏங்கஃங் ஞண் கசடதபறங்
யரலவ ங்மங் த்ருங் ழழங்
ஔஉறங் ஷண்டமலங் ஙநணங் ஹௌங்
ஈர்அறு சூக்கம் இடத்துடி இன்தமிழ்"
(கூத். தாளநூல்-50)

என்பவையாம்.

யோகியார் கருத்து :

கூத்தநூலுக்கு உரையெழுதிய ச. து, சு. யோகியார் இம் மூன்று சூத்திரங்களையும் மேற்கோளாகக் காட்டியுள்ளார். அவ் விடத்து, "வடதமிழ் என்பது வடமொழி" என எழுதுகிறார்.

மேலும், 49-ஆம் சூத்திரத்தின் அமைப்பு வடமொழிக்குச் சிவன் இயற்றிய மகேஸ்வர சூத்திரங்களை ஒட்டியுள்ளது. எனினும் சில வேறுபாடுகள் உள்ளன.

வடமொழி மகேஸ்வர சூத்திரங்கள் :

1	"அ இ உ ண்"	8	"Jha Bha ஞ்"
2	"ருலுக்"	9	"Gha Dha Dha ஷ்"
3	"ஏஓன்"	10	"ஜ Ba Ga Da Da ச்"
4	"ஐஔச்"	11	"Kha Pha Cha Tha Tha Ca Ta Ta வ்"
5	"ஹயவரட்"	12	"Ka Pa ய்"
6	"லண்"	13	"சஷஸர்"
7	"ஞம ஙணநம்"	14	"ஹல்"

மேலுள்ள வடமொழி மகேஸ்வரச் சூத்திரங்களைக் கூத்தநூல் சூத்திரங்களோடு ஒப்பிடுகையில் 'ட' வருக்கத்தில் ஒரு 'ட'வும்,

'த' வருக்கத்தில் 'த' வும் கூத்த நூலில் இல்லை என்பதை அறியலாம் இதுபற்றி ஆழ்ந்த ஆராய்ச்சி தேவை எனக் கூறுவதோடு நிறுத்தி மேற்செல்வோம்.

கூத்தநூல் சூத்திரங்கள் வடக்கே வழங்கிய மொழிக்கும் தெற்கே வழங்கிய மொழிக்கும் நெருங்கிய தொடர்புண்டென்பதை 'வட தமிழ்', 'தென்தமிழ்' என்னும் பெயர்களாலேயே நமக்குத் தெரிவிக்கின்றன. பிற்காலத்தோரும் வடமொழியைப் பாணினிக்கும் அதனோடு தொடர்புடைய தென்தமிழை அகத்தியர்க்கும் கொல்லேற்று உமைபங்கன் தந்தான் எனக்கூறி மகிழ்ந்தனர். இற்றை நாள் மொழிநூலாரோ உறவு இல்லை எனச்சாதிப்பர்.

பழஞ்சான்றோரின் கருத்துப்படி உள்ள உறவு யாதெனக் காண்போம்.

உயிரெழுத்து அமைப்பு முறை

முதலுயிர் :

இந்திய மொழிகள் அத்தனையும் அகரத்தையே முதலாகக் கொண்டு தொடங்குகின்றன. எனவே, இதனை முதலுயிர் என அழைத்தல் தகும்.

முன்னுயிர்

உயிரெழுத்துக்களுள் அ, இ, உ என்னும் மூன்றும் முன்பாக அமைந்தன. இவற்றின் சேர்க்கையும் கலப்புமே, பிற உயிர்கள் தோன்றக் காரணமாயுள்ளன. ஆதலின் இவற்றை முன்னுயிர் எனலாம்.

பிறப்பும் முறையும் ;

வாயைத் திறந்த அளவில் அகரமும், சிறிது முயற்சி கூடி வாயின் இருபக்கமும் நீளவாக்கில் விரிய இகரமும், அவற்றிலும் முயற்சி கூடி உதடுகள் கூம்ப உகரமும் தோன்றுதலின் மேலுள்ள முறையில் நின்றன.

முன்னுயிர் நெடில்கள் :

மேலுள்ளவை தன்னொடு தான் கூடி மூன்று நெட்டெழுத்துக்களை உருவாக்குகின்றன.

அ + அ = ஆ (எ—டு) பஞ்ச + அங்கம் = பஞ்சாங்கம்
இ + இ = ஈ (எ—டு) இரவி + இந்திரன் = இரவீந்திரன்
உ + உ = ஊ (எ—டு) இரகு + உத்தமன் = இரகூத்தமன்

குறில்	அ	✻✻ ✻✻	இ	✻✻ ✻✻	உ	✻✻ ✻✻
நெடில்	✻✻ ✻✻	ஆ	✻✻ ✻✻	ஈ	✻✻ ✻✻	ஊ

கலப்புயிர் எழுத்துக்கள்

கலப்புயிர் :

முன்னுயிர்களில் இகரமும் உகரமும் முதலுயிராகிய அகரத்தோடு கூடி முறையே ஏகாரத்தையும் ஓகாரத்தையும் தோற்றுவிக்கின்றன. இரு உயிர்களின் சேர்க்கை புலப்படாவாறு ஓர் எழுத்து நீர்மையாகக் கலந்துள்ளமையால் இவற்றைக் கலப்புயிர் எனலாம்.

அ + இ = ஏ (எ—டு) நர + இந்திரன் = நரேந்திரன்
அ + உ = ஓ (எ—டு) சூரிய + உதயம் = சூரியோதயம்.

பிறப்பு :

அகரத்தை ஒலித்து, அடுத்துள்ள இகரத்தை ஒலிக்க முற்படுகையில் விரைவின் காரணமாக முற்றும் ஒலியாமல் முழு முயற்சியிலிருந்து குறைபட்டுப் பிற எழுத்துக்களையும் ஒலிக்க முந்துதலின் காரணமாக ஏகாரம் தோன்றுகிறது.

இதே காரணந்தான் ஓகாரத்தோற்றத்திற்கும்.

முறைவைப்பு :

அகரமும் இகரமும் கலந்து எழுந்ததால் ஏகாரம் ஊகாரத்தின் பின்னும், அகரமும் உகரமும் கலந்து எழுந்ததால் ஓகாரம் ஏகாரத்தின் பின்னும் வைக்கப்பட்டன.

குறில்	அ	✻ ✻	இ	✻ ✻	உ	✻ ✻	✻ ✻	✻ ✻
நெடில்	✻ ✻	ஆ	✻ ✻	ஈ	✻ ✻	ஊ	ஏ	ஓ

கூட்டுயிர் எழுத்துக்கள்

கூட்டுயிர் :

முன்போன்றே அகரத்தோடு இகரமும், அகரத்தோடு உகரமும் சேர்ந்து முறையே ஐ, ஔ என்னும் இரண்டு உயிர்களைத் தோற்றுவித்துள்ளன. எழுத்து ஒன்றேயாயினும் ஒலிக்கும்பொழுது ஈரெழுத்துக்களின் தன்மை ஓரளவு புலப்படுதலின் இவ்வகை உயிர்களைக் கூட்டுயிர் எனலாம்.

அ + இ = ஐ : அ + உ = ஔ

குறில்	அ	* *	இ	* *	உ	* *	* *	* *	* *	* *
நெடில்	* *	ஆ	* *	ஈ	* *	ஊ	ஏ	ஐ	ஓ	ஔ

முறைவைப்பு :

அகரமும் இகரமும் கூடி எழுந்ததால் ஐகாரம் ஏகாரத்தின் பின்னும், அகரமும் உகரமும் கூடி எழுந்ததால் ஔகாரம் ஓகாரத்தின் பின்னும் வைக்கப்பட்டன.

சிறப்பும், சிறப்பின்மையும் :

ஏகாரமும் ஓகாரமும் ஓர் எழுத்து நீர்மையாகத் தோன்றுஞ் சிறப்பின்மையின் முன்னரும், ஐகாரமும் ஔகாரமும் ஓரளவு பிரிந்து தோன்றும் சிறப்பின்மையின் பின்னரும் இடம்பெற்றன.

தொல்காப்பியர்க்கும் உடன்பாடு :

அகரமும் இகரமும் கூடியே ஐகாரம் உருவாயிற்றென்பது தொல்காப்பியர்க்கும் உடன்பாடு. அதனாலேயே,

'' அகரம் இகரம் ஐகார மாகும் '' (தொல். மொழிமரபு—21)
'' அகரம் உகரம் ஔகாரமாகும் '' (தொல். மொழிமரபு—22)
போன்ற நூற்பாக்களை அமைத்தார்.

தோன்றும் சிக்கல் :

ஆனால், ' அ இ ' என்பது 'ஐ' ஆயிற்றா? அல்லது, ' ஆ இ ' என்பது 'ஐ' ஆயிற்றா என ஓர் ஐயம் தோன்றுகின்றது. காரணம்,

'உண்பை', 'செல்குவை', 'நகுவை' போன்ற அமைப்புடைய சொற்கள் பிற்காலத்தே 'உண்பாய்', 'செல்குவாய்', 'நக்குவாய்' போன்ற அமைப்பைப்பெறுகின்றன. இதில் 'ஐ' என்பது 'ஆய்' என மாறுவதைக்காண்கிறோம்.

வடமொழிச் சான்று:

ச + ஏவ = சைவ என ஆகிறது, இது எவ்வாறு ஆகின்றது என்பதனைக் காண்போம்.

ச்அ × அஇவ > ச்அஅஇவ > ச்ஆஇவ > ச்ஐவ = சைவ.

தமிழ், வடமொழி இரண்டிலும் 'ஆஇ' என்பதே 'ஐ' என்னும் எழுத்தாய் உருக்கொள்கிறது என்பதைக் காண்கின்றோம். அப்படியமைந்தது உண்மையானாலும் நெடுங்கணக்கில் அது பெற்றுள்ள இடம் சரியான இடமே.

அஇ = ஐ என்பதே பெரிதும் பொருந்துவது.

புள்ளியின் மதிப்பு

புள்ளிகள்:

தமிழ்மொழியில் சில எழுத்துக்கள் புள்ளி பெறுகின்றன. அப்புள்ளியின் மதிப்பைத் தெரிந்தபின் எகர ஒகரங்களைப்பற்றி ஆராயலாம்.

எழுத்து		மாத்திரை		எழுத்து		மாத்திரை
க	—	1	;	க்	—	½
ங	—	1	;	ங்	—	½
ச	—	1	;	ச்	—	½
ஞ	—	1	;	ஞ்	—	½
ட	—	1	;	ட்	—	½
ண	—	1	;	ண்	—	½
த	—	1	;	த்	—	½
ந	—	1	;	ந்	—	½
ப	—	1	;	ப்	—	½
ம	—	1	;	ம்	—	½
ய	—	1	;	ய்	—	½
ர	—	1	;	ர்	—	½

ல	—	1	;	ல்	—	½
வ	—	1	;	வ்	—	½
ழ	—	1	;	ழ்	—	½
ள	—	1	;	ள்	—	½
ற	—	1	;	ற்	—	½
ன	—	1	;	ன்	—	½

மேலனவற்றைக் கூர்ந்து சிந்திப்பார் ஓர் உண்மையை அறிவர். புள்ளி பெறுமுன் இருந்த மதிப்பு புள்ளி பெற்றபின் பாதியாகிறது. அவ்வாருயின் புள்ளியின் மதிப்பு என்ன ? புள்ளி பெறுவதன்முன் உள்ள மதிப்பைப் புள்ளி பாதியாக்கும்.

பின்னுயிர் எழுத்துக்கள்

ஆ, ஈ, ஊ தோன்றிய முறை :-

அகரம் இகரம் உகரம் தனித்தனியே தன்னேடு கூடி இரண்டு மாத்திரையுடைய நெடில்களை உருவாக்கின.

ஏ, ஓ தோன்றிய முறை :-

இரு வேறு குறில்களில் கலப்பால் ஏகாரமும் ஓகாரமும் நெடில்களாகத் தோன்றின. அவற்றிற்கு இனக்குறில்கள் இன்மையால் அவற்றை உருவாக்கக் கருதிய தமிழர் புள்ளி வைக்கும் முறையை கையாண்டனர்.

எகர, ஒகரத் தோற்றம் :-

ஏகாரத்தின் மீது புள்ளியிட்டு எழுதவே ஒரு மாத்திரையுடைய எகரக் குறிலும், ஓகாரத்தின் மீது புள்ளியிட்டு எழுதவே ஒரு மாத்திரையுடைய ஒகரக் குறிலும் தோன்றின.

எகரம், ஒகரம் புள்ளி பெறுவதைத் தொல்காப்பியம், நன்னூல் போன்ற இலக்கண நூல்கள் கூறும்.

தொல்காப்பியத்திற்கு விளக்கம் :

இவ்விளக்கம் தொல்காப்பியத்திலுள்ள சில நூற்பாக்களுக்குச் சிறிது விளக்கம் தரும். மகரக் குறுக்கம், குற்றியலுகரம் பற்றிக் கூறும்

'' உட்பெறு புள்ளி உருவா கும்மே ''

(தொல். எழுத்து. நூன் மரபு-14)

" மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல் "
(தொல். எழுத்து. மொழி மரபு-2)

" குற்றிய லுகரமும் அற்றென மொழிப "
(தொல். எழுத்து. மொழி மரபு-3)

என்னும் நூற்பாக்களால் தொல்காபியர் காலத்தே மகரக்குறுக்கம் 'ம்' என்பது போல் இரண்டு புள்ளிகளோடும், குற்றியலுகரமாக வருகின்ற கு, சு, டு, து, பு, று என்னும் எழுத்துக்கள் கு̇ சு̇ டு̇ து̇ பு̇ று̇ என்று புள்ளி வைத்து எழுதப்பட்டிருக்கலாம் என எண்ணத் தோன்றுகின்றது. ஆனல், குற்றியலிகரத்திற்குப் புள்ளி கூறப்படவில்லை. ஒருவேளை குற்றியலுகரம் ஒருமொழிக் கண்ணும் குற்றியலிகரம் இருமொழிச் சேர்க்கையாலும் அமைவது காரணமாக இருக்குமோ ? இது ஆயத் தக்கது-

எகர. ஒகரத்திற்துப் பெயரிடல் :-

இவ்வாறு புள்ளி பெற்று எல்லா உயிர்களுக்கும் பின் தோன்றியதாகலின் இவற்றைப் பின்னுயிர் எனலாம்.

முறைவைப்பு :-

ஒன்று, இரண்டு என்பதே முறையாதலின் இரண்டு மாத்திரையுடைய ஏகாரத்தின் முன் ஒரு மாத்திரையுடைய எகரமும் ஓகாரத்தின் முன் ஒகாரமும் வைக்கப்பட்டன.

குறில்	அ	* *	இ	* *	எ	* *	* *	* *	ஒ	* *	* *	* *
நெடில்	* *	ஆ	* *	ஈ	* *	ஏ	* *	ஐ	* *	ஓ	* *	ஔ

தொகுப்பு :

இதுவரை கூறியவற்ருல் தமிழ் உயிரெழுத்துக்கள் அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்னும் முறையை எவ்வாறு பெற்றன என்பதைத் தெளிவாக அறிந்தோம். இவற்றுள் ஆ, ஈ, ஊ, என்னும் மூன்று நெட்டெழுத்துக்களும் ஏ. ஓ நெடில்களுக்குக் காலத்தால் பின் தோன்றியனவோ என எண்ணத் தோன்றுகின்றன. காரணம், (1) மேலைமொழிகளில் குறில் நெடில் வேறுபாடு இல்லை, (2) மகேஸ்வரச் சூத்திரங்களில் குறிக்கப்படவில்லை.

பிராகிருதத்தில் பின்னுயிர்

பிராகிருத மொழியில் அ,ஆ,இ,ஈ,உ,ஊ,ஏ,ஓ என்னும் எட்டு எழுத்துக்களே உயிர்களாக உள்ளன.

இது முன்னுயிரும் கலப்புயிரும் மட்டுமே கொண்ட அடிப்படை நிலை.

பிராகிருதத்திலுள்ள ஏ, ஓ என்னும் இரண்டு எழுத்துக்களும் சில நேரங்களில் குறில்களாக ஒலிக்கின்றன. என்பது கவனிக்கத் தக்கது. வழக்கத்திலுள்ள எகர ஒகரங்களுள்ள சொற்களுக்கு உருவம் தர அவ்வாறு செயல்படுகின்றன.

(எ—டு) எக்க, தெல்ல ; சொக்க, கொக்கை.

பிராகிருதத்தில் ஐ. ஔ. ரு, ரூ, லு, அம், அஹ என்னும் எழுத்துக்கள் இல்லாமை நன்கு நோக்கத்தக்கது.

உயிர்த்தன்மை பெறாத உயிர்கள்

சமஸ்கிருத மொழியில் அ.ஆ.இ.ஈ,உ,ஊ,ரு,லு,ஏ,ஐ.ஓ,ஔ, அம்,அஹ எனப்பதினைந்து உயிர்களைக் காண்கிறோம்.

பிராகிருத உயிர்கள் எட்டோடும் ஐ. ஔ என்னும் இரண்டு உயிர்கள் சமஸ்கிருதத்தில் இடம்பெறுவதைத் தக்க காரணங்கண்டு அமைதிகொள்ள முடிகிறது.

ஆனால் ரு.ரூ,லு,அம்,அஹ என்ற ஐந்து எழுத்தும் முழுமையான உயிர்த்தன்மைப் பெறாதிருந்தும் அவை உயிரோடு வைத்து எண்ணப்படுவது வியப்பாகவே உள்ளது.

உயிர்த்தன்மையானது உள்ளிருந்து எழும் காற்று, நாக்கு, அன்னம், பல் முதலானவற்றால் தடைப்படுதலின்றி வாய்த்திறத்தலும் இதழ்குவிதலும் இதழ்விரிதலும் ஆகியவற்றால் தோன்றுந் தன்மை. அதாவது, தடைப்படுதலில்லாத காற்றுமாத்திரத்தானே தோன்றுந்தன்மை. இதனாலேயே உயிர்க்கு ஆவி என்னும் பெயரும் அமைந்தது.

ஆங்கிலம் முதலான மொழிகளின் உயிரெழுத்துக்கள் இவ்வுயிர்த் தன்மையைப் பெற்றிருத்தல் அறிக.

பிராகிருதத்தின் முன்மையும் சமஸ்கிருதத்தின் பின்மையும்

பிராகிருதம் சமஸ்கிருதத்தினும் காலத்தால் முற்பட்டது.

1. மேலுள்ள உயிரெழுத்து அமைப்பை ஒப்பிடுங்காலைப் புலனாகும். பிராகிருதம் தோற்ற நிலையையும் சமஸ்கிருதம் வளர்ச்சி நிலையையும் காட்டுகிறது.

2. பிராகிருதம் என்ற சொல்லுக்கு 'முன்னர் செய்யப்பட்டது' அல்லது 'இயற்கையாய் அமைந்தது' என்பது பொருள். சமஸ் கிருதம் என்ற சொல்லுக்கு 'நன்றாகச் செய்யப்பட்டது' என்பது பொருள். பிராகிருதம் என்ற சொல்லுக்கு எப்பொருளைக் கொண் டாலும் காலத்தால் முந்திய தன்மையைக் காட்டும்.

3. பிராகிருதம் என்ற பெயர் சமஸ்கிருதம் செய்யப்பட்ட பின்னரே கொடுக்கப்பட்டிருக்கவேண்டும். அதற்குமுன் அம் மொழியின் பெயர் தெரியவில்லை. மூத்த திருநாவுக்கரசு என்னும் பெயர் இளைய திருநாவுக்கரசு தோன்றிய பின்னரே வழக்கில் வந்திருக்க வேண்டும்.

மேலையாரிய மொழிகளில் எகரம், ஒகரம்

இயற்கையாய் அமைந்த எந்த ஒரு மொழியிலும் எகர, ஒகரக் குறில்களைக் கொண்ட சொற்கள் இல்லாதிருப்பது அரிது. மேலைய ஆரிய மொழிகள் எனப்படும் கிரேக்க இலத்தீன் மொழிகளிலும் பல நூற்றுக்கணக்கான சொற்களைக் காணலாம். கிரேக்கர் தங்கள் நாட்டையே 'ஹெல்லாஸ்' என்று தான் பெயரிட்டு அழைத்தனர். ஹெர்குலிஸ், ஹெக்டர், ஒடிசியஸ், ஒலிம்பஸ் முதலான எண்ணற்ற பெயர்களை நோக்குக. ஆனால், சமஸ்கிருதத்தில எகர, ஒகரச் சொற்கள் இல்லை. காரணம், எழுத்தமைப்பின் தொடக்கநிலையையே அது கடுமையாகப் பின்பற்றியது; வழக்கிலுள்ள எகர, ஒகரச் சொற் களை ஏற்றுகொள்ளவில்லை; மொழியை மேலும் கடுமையாக்கியது.

ஆனால் பிராகிருதம் தொடக்கநிலை எழுத்தமைப்பை மேற்கொண் டாலும் வழக்கிலுள்ள எகர ஒகரச் சொற்களையும் ஏற்றுக்கொள்ள முற்பட்டது; எளிமையாக ஒலிக்க முயன்றது; பொதுமக்கள் மொழியாக விளங்கவே முயன்றது.

மெய்யெழுத்து அமைப்பு முறை

சுற்று	எழுத்துக்கள்	உறுப்புக்களின் முயற்சி
1.	க ங	அடிநா அண்ணம் உறுதல்
	ச ஞ	இடைநா அண்ணம் உறுதல்
	ட ண	நுனிநா அண்ணம் உறுதல்
	த ந	நாநுனி அண்பல்லினடியை ஒற்றல்
	ப ம	மேலிதழும் கீழ்இதழும்இயைதல்
2.	ய	மிடற்றுவளி அண்ணம் கண்ணுறல்
	ர	நாநுனி அண்ணம் வருடுதல்
	ல	நாவிளிம்பு வீங்கி அண்பல்லினடியை ஒற்றல்.
	வ	மேற்பல்லும் கீழ்இதலும் இயைதல்
3	ழ	நாநுனி அண்ணம் வருடல்
	ள	நாவிளிம்பு வீங்கி அண்பல்லினடியை வருடல்
4.	ற ன	நாநினி அண்ணம் ஒற்றல்

மேலுள்ள எழுத்து அமைப்பு முறை உள்ளுறுப்புக்களின் முயற்சி தொடங்கி வெளிநோக்கி வருவதைக் காண்கிறோம். அடிநா அடி அண்ணம் உறுதல் தொடங்கி இதழ் இயைதல் வரை இரண்டாம் சுற்றாகவும், இவ்வாறே நான்கு சுற்றுக்களைக் கணக்கிட்டு எண்கள் கொடுத்துள்ளோம்.

முதல் இரண்டு சுற்றுக்களும் தமிழுக்கும் வடமொழிக்கும் உள்ள பொது எழுத்துக்களுக்குத் தோற்றமுறை கூறுவன.

(தொடரும்)

தமிழில் உகரச் சுட்டு

(டாக்டர் மோ: இசரயேல் மதுரை - 625 021)

முன்னுரை :

தமிழ்மொழியில் மரபுவழியில்வந்த சுட்டுக்களில் உகரமும் ஒன்று இது இன்றைய மொழியில் வழக்கிறந்துவிட்டது. உகரச்சுட்டு

தொல்காப்பியத்தில் பல இடங்களில் சுட்டப்படுதலும் அன்றி, சங்க இலக்கியங்களிலும் பதினெண்கீழ்க்கணக்கு, இரட்டைக் காப்பியங்கள் போன்ற சங்கம் மருவிய கால நூற்களிலும், நாலாயிர திவ்யப் பிரபந்தம் திருக்கோவையார், சீவக சிந்தாமணி, கந்தபுராணம், சேது புராணம் போன்ற பிற்கால இலக்கியங்களிலும் ஓரளவு ஆட்சி பெற்றுள்ளது. உகரச் சுட்டிற்கு இதுகாறும் கொள்ளப்பட்டு வருகின்ற பொருளைச் சுட்டிக் காட்டி, அதன் உண்மைப் பொருளை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

உகரத்தின் பொருள் :

இன்று பலர் இகரம் அண்மையினையும், அகரம் சேய்மையினையும் உகரம் இரண்டிற்கும் இடைப்பட்ட நடுவிடத்தினையும் சுட்டுகின்றனவாகக் கருதுகின்றனர். இலக்கியங்களில் உகரச்சுட்டு பெரும்பாலும் நடுவிடம், சிலவிடங்களில் மேலிடம் ஒரோவிடங்களில் அப்பால் உள்ள இடம் ஆகியவற்றைச் சுட்டுவதாகப் பொருள் கூறப்படுகின்றது. இகரமும் அகரமும் இன்றைய மொழியிலும் ஆட்சி பெற்றுள்ளன உகரத்திற்கு உரையாசிரியர்கள் தரும் விளக்கமும் பல அறிஞர்கள் தரும் கருத்துக்களும்,1 பழந்தமிழ் இலக்கியங்களையும் உகரச் சுட்டின் பிற திராவிடமொழி வழக்குகளையும்2 கூர்ந்து நோக்கி ஆயுங்கால் ஏற்புடையனவாக அமையவில்லை.

உகரச்சுட்டின் வழக்கு

தொல்காப்பியம் :

தொல்காப்பியனர் உகரச் சுட்டிற்குப் பொருள் சுட்டவில்லை. அவர்,

‘அஇ உ அம் மூன்றும் சுட்டு’ (தொ. எ. 31)

என்கிறுர்.

மேலும் அவர் உகர ஈற்றுப் புணர்ச்சிக்கண் இச்சுட்டுப் புணர்ச்சி பற்றி குறிப்பிடுகின்றுர். (தொ. எ. 255—257); சொல்லதிகாரத்தில் உவன், உவள், உவர் (தொ. சொ. 192), உது, உவை, உவ் (தொ. சொ. 197) போன்ற சொற்களையும் தந்துள்ளார். தொல்காப்பிய உரையாசிரியர்கள் சுட்டு முதலாகிய இகர இறுதி (தொ. எ. 159) உதோளி என்ற சொல்லையும், ‘சுட்டுச்சினை நீடிய ஐயென் இறுதி’ (தொ. எ. 159) என்பதற்கு ஊண்டை, ஊங்கவை போன்ற சொற்களையும் சுட்டு முதல் உகரம் அன்னெடு சிவணுதற்கு (தொ. எ. 176) உதன் என்ற வடிவத்தையும், ஐகார ஈற்று உகரப் புணர்ச்

சிக்கு (தொ. எ. 177, 183. 263, 281) உவற்றை என்பதையும். சுட்டு முதலாகிய வகர இறுதிச் சொற்கள் (தொ. எ. 378—381) புணர்தல் பற்றிக் கூறுங்கால் உஃகடியது, உஞ்ஞாண். உவ்யாது போன்ற எடுத்துக்காட்டுக்களையும், சுட்டுச்சினை நீடிய மென்கருடர் மொழியின்கண் (தொ. எ. 427, 429) ஊங்கு என்ற சொல்லையும் தருகின்றனர்.

சங்க இலக்கியம் :

சங்ககாலத்தில் எட்டுத்தொகையில் இச்சுட்டியாகப் பிறந்த உம்பர், ஊங்கு, உத்துக்காண், உவக்காண், உது, ஊங்கண், ஊங்கனோர், உவன், உவள், உவ், உப்பால், உம்மை போன்ற சொற்கள் மட்டுமே ஆட்சிபெற்றுள்ளன. உம்பர் என்னும் சொல் நன்னுட்டும்பர் (அகம். 113.17; 311 12; 386.16: 393.19; குறு. 11 6), வேங்கடத்தும்பர் (அகம். 209 9; 211; 213.3), குன்றத்தும்பர் (அகம். 215.1), ஊணூர் உம்பர் (அகம். 227 18) ஏழிலும்பர் (குறு. 138.1) என்னுமிடத்தில் அப்பால் - சேய்மையில் உள்ள (கண்ணுக்கு எட்டாத) இடங்களையும் முன்னுள் உம்பர் (நற். 198.3) என்னும் இடத்தில் கடந்த காலத்தையும் உம்பர் (ஐங். 401.5) என்னுமிடத்தில் தேவருலகத்தையும் சுட்டுகின்றது. ஊங்கு என்னும் சொல் காண வூங்கே (நற். 101.9; 160.10; 199 11; குறு. 352 6' புறம் 88 6; 141.7), மணவா வூங்கே (குறு. 357.8). தணவாவூங்கே (குறு. 386 6) உணரா வூங்கே (குறு. 297.7). இல்லா வூங்கே (நற் 145 5) என்னுமிடங்களில் கழிந்து போயது - முன்பு என்ற பொருளிலும், நகரா வூங்கே (நற். 135 9), ஈங்கு ஊங்கு (பரி. 4.5) இருங்கடல் ஊங்கு (பரி. 16.27). பரவா ஊங்கே (பதிற். 29 15) என்னும் இடங்களில் சேய்மை இடம் என்ற பொருளிலும் ஆட்சி பெற்றுள்ளது. உது (குறு. 179 3; நற். 963; 415.2) சேய்மையான அன்றேல் காண இயலாத இடத்தைக் குறிப்பதாக உள்ளது.

ஊங்கண் (நற். 246.1) சேய்மையான மூன்றும் இடத்தையும் ஊங்கனோர் (புறம். 39.6) முன்னுள்ளோர் — மறைந்தோரையும் குறிக்கின்றது. பரிபாடலில் உவன் (பரி 11.1க்) உவள் (பரி. 12.55 உவ் (பரி. 2. 58, 59) என்பவையும் மூன்றும் நிலையிலுள்ள ஆள் அல்லது இடத்தைக் குறிப்பனவாக உள்ளன. உப்பால் (பரி. 11.8) மேலிடத்தையும், உம்மை (புறம். 236.10) மறுமையையும் குறிப்பனவாக உள்ளன.

உதுக்காண், உவக்காண் :

எட்டுத்தொகை நூற்களில் உதுக்காண் என்ற தொடர் 16 இடங்களிலும் உவக்காண் 6 இடங்ளிலும் ஆட்சி பெற்றுள்ளன. உதுக்காண் என்பது ஓரிடத்தில் உதுவக்காண் (அகம். 330.11) என்ற வடிவில் உள்ளது.

இத்தொடர்களில் உது என்னும் சொல் தேர் (அகம். 380.9) வான் (நற்.387.9) பொழுது (அகம் 204.8) புலவிநிலை (குறு.191.1) உழி (=அப்பொழுது கலி. 144.32), கருவி (=மேகம், நற். 329.9) குறுஞ்சுனை (கலி.108.39), சிறுநல்லூர் (குறு.81.4) பரிய வூர்பிழிபு) (நிகழ்ச்சி, ஐங். 101.1) கார் (ஐங். 453.2), தேர் (ஐங். 453.4) போதல் (புறம். 210.12), படர்தந்தோன் (புறம். 301.11), எந்தை (புறம். 307.3) பெருந்தகுநிலை (நற். 21.5) தேர் (அகம். 350.11) ஆகியவற்றையும், உவ என்னும் சொல் சிறுநல்லூர் (அகம் 350 16), நளிசுடர் (அகம் - 114.8), சுவண் (=சேம்மை, குறு. 367.3), மாரிக்குலத்துக் காப்பாளன் (ஐங் 206 1) குன்று (ஐங். 207.2), குறும்பொறை நாடன் (அகம். 4. 13) ஆகியவற்றையும் சுட்டுவனவாகச் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன இவ்விடங்களில் எல்லாம் இவை மிகச் சேய்மையான அல்லது கடந்துபோன ஓரிடத்தை, ஒரு காட்சியை அல்லது பொழுதை அன்றேல் ஒருவனைச் சுட்டுவனவாகவே உள்ளன.

> உதுக்காண் தெய்ய உள்ளல் வேண்டும்
> நிலவும் இருளும் போலப் புலவுத்திரை
> கடலும் கானலும் தோன்றும்
> மடல்தாழ் பெண்ணையெஞ் சிறுநல்லூரே (குறு. 84. 1—4)

உவக்காண் தோன்றுமெஞ் சிறுநல்லூரே (அகம். 360.15) இவண் உதுக்காண், உவக்காண் என்னும் இருதொடர்களும் சிறுநல்லூரைச் சுட்டுவனவாக அமைகின்றன. இவற்றையும் பிற வழக்குகலையும் ஆயுங்கால் இவை தம்முள் பொருள் வேறுபாடு உடையன அல்ல எனத்தோன்றுகிறது.

எனவே சங்க இலக்கிய வழக்குகளின் அடிப்படையில் உகரச் சுட்டு பெரும்பாலும் மூன்றும் நிலையிலுள்ள அதாவது அகரத்திற்கும் அப்பாற்பட்ட சேய்மையிடத்தைக் குறிப்பிடவும், இறந்தகால நிகழ்ச்சியை எண்ணிப்பார்க்கின்ற நிலையினை விளக்கவும், அப்போதைய நிலையில் காணமுடியாத ஒரு பொருளை (இடத்தை) அன்றேல் ஆளைக்குறித்துக சுட்டவும், நடந்து அனுபவித்த இறந்தகால நிகழ்ச்

சியைக் கூறவும், ஒரோவிடங்களில் விளக்கமுடியாத — கண்ணுக்கு எட்டாத மேலுலகத்தைச் சுட்டவும் பயன்பட்டது என அறியலாம். எனவே, உகரச்சுட்டு இடம், காலம் ஆகியவற்றின் அகரச்சுட்டு சுட்டுதற்கப்பாற்பட்ட சேய்மையை சுட்டவே வழங்கிற்று எனலாம்.

பிற்கால இலக்கியங்கள் :

உகரச் சுட்டடியாகப் பிறந்த சொற்கள் பலவும் பிற்கால இலக்கியங்களில் மிகச் சேய்மையில் உள்ள — கண்ணுக்கெட்டாத விண்ணுலகத் தொடர்பானவற்றைக் குறிக்கப் பெரும்பாலும் பயன்படலாயிற்று. எனவே, உகரச்சுட்டு காலப்போக்கில் சமயக்கருத்தை உணர்த்துவதற்காக — சமயச்சார்புடையதாக ஆட்சி பெற்று சமயச் சார்பு பொருளை ஓரளவு ஏற்றுக்கொண்டது எனலாம். எ—டு உம்மை (மறுமை). உம்பர் (மேலுலகம், தேவர்), உம்பரான் (தேவர்), உப்பால் (மேல் உலகம்). இத்தகைய சமயச்சார்பு வழக்கிற்கு அடிப்படை பரிபாடலின்கண் அமைந்துவிட்டது என்று எண்ண வாய்ப்பு உள்ளது.

உம்மை வினைவந் துருத்த லொழியாது (மணி. 26-32)
எம்மை இகழ்ந்த வினைப்பயத்தால் உம்மை
எரிவாய் நிரயத்து வீழ்வர் கொல் (நாலடி 58, 2, 3)
உம்மையே என்பார் ஓரார் காண் (திணைமாலை
நூற். 123. 2)
உம்ப ருறையு மொளிகிளர்வா னூர்படும் (பரி. 11. 70)
வாய்வாய் மீபோய் உம்பர் இமைப்பிறப்ப (பரி. 17. 31)
ஆறைங் காத நம்மனுட் டும்பர் (சிலம். 10 42)
உம்ப ரில்வழி யிம்பரில் பல்பிறப்பு (மணி. 26. 38)
உம்பர்க் கிடந்து உண்ணப் படும் (நாலடி 37. 4)
உப்பர் உறைவான் பதி (நாலடி 137. 4)
ஒலிகடல் சூழுலகா மும்பர் தாமே
(திவ். பெரியதிருமொ. 7. 8. 10)
யான் வருந்தி யும்பரிழைத்த நூல்வலயம்
(பெரியபு. கோக்செங். 5)
இல்லத் துணைக்குப் பால்எய்த இறையவள் (பரி 11.8)
உப்பா லுயர்ந்த வுலகம் புகும் (நான்மணி 27)

இவண் உம்மை மறுமையையும், உம்பர் பெரும்பாலும் தேவர் அன்றேல் தேவருலகத்தையும், உப்பால் விண்ணுலகத்தையும் குறித்து வழங்குதல் காண்க. மேலும் உவண் (சிவ. 28. 5.), மேலுலகத்தையும், உங்ஙனம் (கந்தபு. தக்கன். மக. 52), விண்ணுலகத்தையும் உம்பர்கோன் இறையவர் தலைவனையும் (திவ். பெரிய

திருமொ. 5.4.5), உம்பரார் (சிவ. 16. 78), உம்பரான் (கந்தபு மாயை 33) ஆகியன இறையவனையும் குறித்து வழங்குகின்றன. உங்கள் (திருக்கோ. 16) உவ்வாறு என்ற பொருளிலும், ஊங்கண் (சேதுபு. அக்கினி. 32) உவ்விடம் (சேய்மையிடம்) என்ற பொருளிலும் அமைகின்றன.

முடிவுரை :

எனவே உகரச்சுட்டு நடுவிடத்தைச் சுட்டவில்லை எனவும், அது அகரத்திற்கும் அப்பாற்பட்ட சேய்மையை—மூன்றும் நிலையான சேய்மையைச் சுட்டப் பயன்பட்டது எனவும், காணுதற்கியலாத இறந்த கால நிகழ்ச்சி சேய்மையான இடம் கடந்த கால எண்ணங்கள் ஆகியவற்றையும் சுட்ட வழங்கியது எனவும்; காலப்போக்கில் கண்ணுக்கு எட்டாத இறைவனையும் விண்ணுலகத்தைச் சுட்ட மிகுதியும் பயன்படுத்தப்பட்டு, சமயத் தொடர்பான சொல்லாக மிகுதியும் ஆட்சி பெற்றுவிட்டது எனவும் அறிகின்றோம்.

இலங்கைத் தமிழில் இச்சுட்டு இன்றும் ஆட்சி பெற்றுள்ளது. அங்கு இது மூன்றுவது ஆளை பொருளைச் சுட்டப் பயன்படுத்தப்படுகிறது. சுட்டப்படுகின்றது அண்மையிலும் சேய்மையிலும் இருக்கலாம்; அல்லது அது பற்றிய செய்தி உரையாடலில் இடம்பெறலாம். இங்கும் உகரம் நடுவிடத்தைச் சுட்டவில்லை. ஆனால் மூன்றும் நிலையினதைச் சுட்டப்பயன்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இலக்கியம் பெறாத கூயி, கூவி போன்ற திராவிட மொழிகளிலும் இந்நிலையே காணப்படுகின்றது,

குறிப்புக்கள்

1 Tamil Lexicon, Vol. I, pp. 416, 462, 464-466.

2 Wsnfield. W.W.. A Grammar of the Kui Language, pp. 43, 44, Krishnamurti, Bh. K., Konda or Kubi, A Dravidian Language, pp. 214, 257. Israel, M., A Grammar of Kuvi Language, pp. 82.85 (with Texts and Vocabulary).

3 Israel, M. Demonstration in Kubi, Kubi and Kuvi, IJDL, Vol. VI (1977). pp. 223-233.

தொல்காப்பியமும் சார்பெழுத்துக்களும்

(ச. பாலசுந்தரம், துணை முதல்வர் கபுக)

தென்மொழியாய தமிழ்மொழியுள் அமைந்துள்ள எழுத்துக்களை எண்ணித்தொகை கூறுங்கால் ஆசிரியர் தொல்காப்பியர் தலையாய சிறப்புடையவை முப்பஃதென்றும் அவற்றை ஒப்ப வருபவவ மூன்று எனறும் கூறியுள்ளார் எனவே, முப்பத்து மூன்று எழுத்துக்கள் தமிழுக் குரியவை என்பது புலனாகின்றது. இவை தொன்றுதொட்டு வருவன என்பதை

''எழுத்தெனப்படுப
அகர முதல் னகர இறுவாய்
முப்பஃதென்ப
சார்ந்துவரல் மரபின் மூன்றலங்கடையே''
'' அவைதாம்
குற்றியலிகரம், குற்றியலுகரம்
ஆய்தம் என்ற

முப்பாற்புள்ளியும் எழுத்தோரன்ன'' என வழிநூல் வாய்பாடு தந்து ஆசிரியர் கூறுவதால் அறியலாம்.

காலத்தால் மறைந்த முன்னூல்களைப் பயின்று நெறியாக வழி நூல் செய்த தொல்காப்பியர் சார்பெழுத்துக்கள் மூன்றே என முதற் கண் விளக்கிப்பின் ''சார்ந்துவரினல்லது தமக்கியல்பிலவெனத் தேர்ந்து வெளிப்படுத்த ஏனை மூன்று'' என்று யாப்புறுத்துள்ளமை யைப்பயின் றபின்னரும் நன்னூலாய்முதலாய பின்னூலோர் முதலெ ழுத்துக்களின் கூட்டத்தையும் திரிபுகளையும் (விகாரம்) சார்பெழுத் தெனக் கொண்டு சார்பெழுத்துக்கள் ஆறு என்றும், ஒன்பஃதென்றும் பத்து என்றும், இரண்டென்றும் தத்தமக்குத் தோன்றியவாறு கூறி யுள்ளார். அவருள்ளும் ஒராசிரியர் பிறர்கொள்கைக்கு மறுதலையாய்த் தான் சுருக்கக்கூற முற்பட்டு குற்றியலிகரமும் குற்றியலுகரமும் முதலெழுத்துக்களின் திரிபுகளேயாம் என்றும் ஆய்த எழுத்தொன்றே சார்பெழுத்தாம் என்றும் கூறியுள்ளார்.

சார்பெழுத்தென்பதன் பொருளை ஆசிரியர் விதந்து கூறாமல் நாமே உய்த்துணரும் வண்ணம் நூன்மரபினுள் ''எழுத்தோரன்ன''

எனக்கூறி மொழி மரபினுள் துணையும் பற்றுக்கோடும் காட்டி விளக்குதலால். இவை ஒரு மொழியின்கண் பிற எழுத்துக்களைச் சார்ந்து இயங்குமென்று புலப்படுத்தியுள்ளார். சார்புப்பொருள் இரண்டாவதற்குரியதாயினும் ஏழாவதற்கும் வருமென மயக்கங் கூறுதலால் இவை அகர முதலாயவற்றுள் ஒன்றனை இடமாகவும் ஒன்றனைத்துணையாகவும் கொண்டு இயங்கும் என்க. துணையைப் பற்றுக்கோடென்பர் உரையாளர்.

உரையாளர் பலரும் சார்பெழுத்துக்கள் உயிரையும்மெய்யையும் சார்ந்து இயங்கும் என்னுமல் பிறக்கும் என்று கருதிக்கொண்டமையால். உயிர்மெய்யாகிய கூட்டத்தையும், அளபெடை, குறுக்கம் ஆகிய திரிபுகளையும் தனித்தனி சார்பெழுத்தாகக்கருதி எண்ணித் தொகை கொண்டுள்ளனர்.

எழுத்தென்னும் சிறப்பிற்குரிய அகரமுதலாயவற்றிற்கும் எழுத்தோரன்ன என்னும் இம்மூன்றற்கும் உரிய ஒற்றுமை வேற்றுமைகளுள் சிறப்புடைய ஒற்றுமை ஒருமொழிக்கு உறுப்பாக நின்று பொருளை வேறுபடுத்தும் ஒலியனாக விளங்குதல் வேற்றுமை ஒரு மொழிக்கண்ணன்றி உயிராகவோ உயிர்மெய்யாகவோ, தனித்தொலிக்க இயலாமை பிறவற்றைப் பின்னர் அவ்வத் தலைப்புக்களில் காண்போம். எழுத்துக்கள் ஒலியினவாயினும் வாளா இசைக்கும் ஒலி வேறு, மொழிநிலையில் ஒலிக்கப்பெறும் எழுத்தொலி வேறு அ ஆ இழந்தானென்றெண்ணப்படும் என்னுமிடத்து அ ஆ எழுத்துக்கள் அல்ல ஒலிக்குறிப்பு. அ உ அறியா அறிவிலிடை மகனே'' எனனுமிடத்து '' அ உ '' எழுத்துக்கள் என்னும் இம்மூன்றும் சுட்டு என்னுமிடத்து அ இ உ சொல் நிலைமை பெறும் இடை சொற்கள் மற்று எழுத்துக்கள்தாம். தனித்தொலிக்குங்காலும் தன்னோடுதான் இணைந்து ஒலிக்குங்காலும் பிறவற்றோடு மயங்கி ஒலிக்குங்காலும் ஒலிநிலை வேறுபடும் வேறுபடினும் ஓரெழுத்தாகவே நிகழும் இதனை

> மொழிப்படுத்திசைப் பினும் தெரிந்து வேறிசைப்பினும்
> எழுத்தியல் திரியா என் மனார் புலவர் என்னும்

நூற்பாவால் தெளியலாம். ஓரளவு ஒலி ஒற்றுமையாக இருப்பினும் பொருள் வேறுபடின் வெவ்வேறெழுத்தாகவே கொள்ளப்படும். சார்பெழுத்துக்கள் மூன்றும் சொற்பொருளை வேறுபடுத்தலின் ''எழுத்தோரன்ன '' என ஆசிரியர் விளக்கினராவர்.

இன்னணம் எழுத்தோரன்னவெனத் தொல்காப்பியர் கூறும் சார்பெழுத்துக்களைப்பற்றிய நூற்பாக்களையும் அவைபற்றி எழுந்த

உரை விளக்கங்களேயும் அவ்வுரைகளின் அடிப்படையில் இற்றைக்கு நிலவும் கருத்துக்களேயும் காண்போம்.

குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தப்புள்ளி ஆய மூன்றனுள் ஆய்தப்புள்ளி ஒழிந்த ஏனைய இரண்டும் உயிர் நெடுங்கணக்கிலுள்ள இகர உகரப் பெயர்களேப்போல பெயர் பெற்றிருப்பினும் அவை வேறு இவை வேறு அஃதாவது மையும் எருமையும் போல என்பதை வலியுறுத்தவே தொல்காப்பியர் சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடை எழுத்து முப்பதென்றும், எழுத்தோரன்ன என்றும் விதந்து கூறியுள்ளார். இவ் இரண்டினேயும் செய்யுளமைப்புடைய நூற் பாக்களில் ஆசிரியர் வழங்குங்கால் குற்றியலிகரம். குற்றிகரம். குறியஇ, குற்றியலுகரம், குற்றுகரம். உகரக்குறுக்கம், குறன்உ, சாயும் உகரம் எனவும் வாளா இகரம். உகரம் எனவும் பெயரிட்டு ணர்த்துவார். இக்குறியீடுகள் அவ்வவ்விடங்களிலும் குற்றிய லிகரம், குற்றியலுகரம், என்னும் பொருள்பட நிற்றலின்றி அவ்வச் சொற்பொருளேச் சுட்டா என்க.

அஃதெவ்வாறெனின் ஒரு புலவர் தம் இலக்கியத்துள் வரும் தலேவியை ஆங்காங்கு வரும் தொடை நய முதலாய யாப்பு முறைக் கேற்பத் தாழ்குழல், பொற்றொடி. சின்மொழி நள்ளாள் திரு மங்கை மடந்தை. அரிவை. தெரிவை, பேதை எனப்பெயரிட்டு வழங்கின் அவை யாவும் பொதுவாகத் தலேவி என்னும் பொருளே யன்றிப் பேதை பெதும்பை முதலாய சொற்களின் சிறப்புப் பொருளேச் சுட்டாமை போல என்க, இவ்வாறே குற்றியலிகரம் குற்றியலுகரங்களேத் தொடை நயங்கருதிச் சிறிது வேறுபட ஆளுவர் என்க.

குற்றியலிகரம், குற்றியலுகரம் என்பவற்றிற்கு உரிய பொருள் அவை எஞ்ஞான்றும் அரை மாத்திரையாகவும் (சிறிது குறைந்தும்) ஒலிப்பதையே இயல்பாகக்கொண்ட இகர உகரங்கள் என்பதாம். இதனேச் சிவஞான முனிவர் தம் விருத்தி உரையுள் தெளிவாக விளக்கியுள்ளமையை ஆண்டுக்காண்க. குற்றிகரம், குற்றுகரம் உகரக் குறுக்கம் என்னும் சொற்பொருளேக் கருதின் முன் நிறைந்து (ஒரு மாத்திரையளவாய்) நின்ற இகர உகரங்களே ஒரு காரணம் பற்றிக் குறைந்து ஒலிப்பதாகக் கொள்ளவேண்டி வரும். அவ்வாறு பொருள் கொள்ளின் அவை முதலெழுத்துக் களின் விகாரமாதலின்றிச் சார்பெழுத்தென வேறுபட எண்ணித் தொகை கொள்வதற்குரியவாக ஆசிரியர் இவற்றைப்பிரித்தெண் ணியும், தனியே பிறப்பு விதி கூறியும் செய்யுளியலுள் இவற்றை விதந்தும் கூறியுள்ளமையால் இவை முதலெழுத்துக்களின்

விகாரங்களல்ல என்பது தெளிவு. அஃதாவது மகனுக்கும் மருமக னுக்கும் கொழுநனுக்கும் கொழுந்தனுக்கும் எவ்வளவு வேறு பாடுண்டோ அவ்வளவு வேறுபாடு முதலெழுத்துக்கும் சார்பெழுத் துக்கும் உண்டென்க.

முதலெழுத்தின் விகாரங்களைப்பிரித்து எண்ணுவது அறிவி யலுக்கு முரணனது. அதனானன்றே நெட்டெழுத்தின் விகார மாகிய அளபெடையையும் மகரக்குறுக்கத்தையும் ஆசிரியர் சார் பெழுத்தென ஓதாது விடுத்தார்.

இவற்றுள் ஒன்றையும் ஓராமல் உரையாளர்களும் ஒரு சார் ஆய்வாளர்களும் தத்தமக்குத் தோன்றியவாறே உயிரது குறுக்கமும் உயிரேயாமென்றும் சந்தனக்கோல் குறுகிய விடத்துப் பிரப்பங் கோலாகாதவாறு போல குற்றிகரக் குற்றுகரங்கள் உயிர் களேயாமென்றும் கூறியுள்ளனர். ஒரு சாரார் மெய்யொடு சார்த்தி இவை மெய்யெழுத்துக்களே என்றும் கூறுகின்றனர்.

மற்று, செந்தமிழியற்கை சிவணிய நிலத்தொடு முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணி வழக்கும் செய்யுளும் ஆயிருமுதலின் எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி வழி நூல் செய்ய முற்படாமல் தொல்காப்பியத்தின் உரைகளையும் பிற சார்பு நூல்களையும் பயின்று வடமொழி இலக்ஷணத்தை அளவையாகக் கொண்டு நூல் செய் தளித்த நன்னூலார் முதலானோர் செந்தமிழின் மாண்பையும் மர பையும் நன்குணரமாட்டாதவராய் தென்றமிழைச் சிதைத்துள்ளனர். இக்குறையையே நிறையெனக் கொண்டும் புதியன புகுந்ததாக மயங்கியும் இற்றைய ஆய்வாளர்கள் அமைதியும் விளக்கமும் கூறி வருகின்றனர். செய்கையும் செய்யுளியலும் நோக்கிச் சார்பெழுத் துப்பத்தாயின என்பாரும்-இலக்கண வளர்ச்சி என்பாருமுளர், இது நிற்க.

முதலெழுத்துக்கள் முப்பதாகி இருக்கச் சார்பெழுத்து மட்டும் மூன்றாக அமைந்துள்ள காரணத்தை ஆராயும் போதுதான் தமிழறிஞர் தம் எழுத்தொலி பற்றிய ஆழ்ந்த அறிவியலுணர்வு புலப் படுகின்றது. அதுபற்றிச் சிறிது காண்போம்.

முதலெழுத்துக்கள் முப்பதனுள் தனித்தியங்கும் ஆற்றலுடைய உயிர் பன்னிரண்டும் நிற்க மெய்யெழுத்துக்களாகிய பதினெட்டும் உயிர் ஒலிகளை வேறு படுத்தி அவற்றின் துணையால் ஒலிப்பனவன் றித் தாமாக ஒலிப்பனவல்ல தாமே ஒலிக்கும் உயிர் பன்னிரண்ட னுள் அடிப்படை ஒலிகள் மூன்றும். அவை அ இ உ என்பவை

இம்மூன்றற்கும் மூல ஒலி அகப்பாட்டொலி அகரமாகும் இதனைச் சூக்குமை என்பார் வடநூலார். இதன் புறப்பாட்டொலியே அகர எழுத்தாம் நுண்ணொலியாகிய மூல அகரம் புறப்பாட்டொலி அகரத்தோடு பொருந்தி இரு கோணங்களில் வெளிப்படுங்கால் அவ்வொலிகள் இகர உகரமாகின்றன; எகர ஒகரங்கள் முறையே இகர உகரங்களின் மறுகோண ஒலிகளாகின்றன. ஐகாரம் அகர இகரங்களின் அலைஒலியாயும் ஔகாரம் அகர உகரங்களின் அலை ஒலியாயும் நிகழ்கின்றன.

ஆக இவ் அடிப்படை எழுத்துக்களாகிய அ இ உ மூன்றும் உயிர்த்தன்மையை கெடாமல் மெய்த்தன்மையையும் ஏற்று (பேடியைப் போல) வேறொரு இயல்பினை எய்திய நிலையில் அவ்வொலிகள் சார்பெழுத்தாகித் திகழ்கின்றன இம்முறையில் ஆய்தம் அகரத்தின் சார்பெழுத்தாகவும் குற்றியலிகரம் இகரத்தின் சார்பெழுத்தாகவும் குற்றியலுகரம் உகரத்தின் சார்பெழுத்தாகவும் நிகழ்கின்றன. அகரத்தின் கோணங்களே இகர உகரமாதலின் ஆய்தத்திற்கு இகர உகர ஒலிகளும் சிறுபான்மை எய்தும் ஆய்தம் நுண்ணொலி அகரத்திற்கும் புறப்பாட்டொலி அகரத்திற்கும் இடைநின்று அஃகம் எனவும் அ(க்)கம் எனவும் (அஃகவிலை — அகவிலை) எனவும் பஃறி பகிறி எனவும் கஃசு கசுசு எனவும் மூவகையாக வடமொழி விசர்க்கம் போல ஒலிக்கும் ஆய்தத்திற்கு இம்மூன்றொலியும் உரிமையாக வருதலின் இதனை முப்பாற்புள்ளி எனச்சான்றோர் குறித்தனர். அதனானே இதனைச் குற்றிகர குற்றுகரங்களின் பின் (அவற்றை அகப்படுத்தி) மூன்றாவதாக வைத்துள்ளனர். இதன் விரிவையும் விளக்கத்தையும் ஆய்தெழுத்தாய் வுரையிற் காண்க. மெய்ப்பொருளியியல் நோக்கிற் காண்போருக்கு இவ்வுண்மை தெற்றெனப் புலப்படும்.

இனி முறையே இம்மூன்று சார்பெழுத்துக்களையும் தொல்காப்பிய நூற்பாக்களின அடிப்படையில் ஆராய்ந்து அவற்றின் இயல்புகளையும் தன்மைகளையும் காண்போம். முதலாவது

குற்றியலிகரம் :-

குற்றியலிகரம் புறப்பாட்டொலியாக இகர உயிரின் சார்பொலியாகும் எனவே அதுபோல இதுவும் மொழி மூவிடத்தினும் வரும் தகுதியினையுடையதாகும். எனினும் தொல்காப்பியர் அதுபற்றி விரியக் கூறாமல் இது தனிமொழிக்கண்ணும், புணர்மொழிக்கண்ணும் வரும் முறையும் பற்றுக்கோடும் சுட்டி நான்கு நூற்பாக்களால் விளக்கியுள்ளார். அவை முறையே குற்றியலிகரம் நிற்றல் வேண்டும்.

" யாவென் சினைமிசை உரையசைக் கிளவிக்கு
ஆவயின் வரூஉம் மகரம் ஊர்ந்தே " தொல்-எழு

" புணரியல் நிலையிடைக் குறுகலும் உரித்தே
உணரக்கூறின் முன்னர்த் தோன்றும் " தொல்-எழு

எனமொழி மரபினுள்ளும்

" யகரம் வரும் வழி இகரம் குறுகும்
உகரக் கிளவி துவரத் தோன்றாது " தொல்-எழுத்

எனக் குற்றியலுகரப் புணரியலுள்ளும்

" ஒற்றெழுத்தியற்றே குற்றியலிகரம் " தொல்-செய்

எனச் செய்யுளியலுள்ளும் கூறப்பெற்றுள்ளனவாகும்.

மேலும் இதன் ஒலிப்பளவு (மாத்திரை) பற்றியும். பிறப்பியல்பு பற்றியும் கூறுமிடத்துச் சார்பெழுத்து மூன்றற்கும் பொதுவாக

" அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே " தொல்-எழு

என நூன்மரபின் கண்ணும்

" தத்தம் சார்பிற் பிறப்பொடு சிவணி
ஒத்தகாட்சியிற் றம்மியல்பிலும் " தொல்'எழு

எனப் பிறப்பியலின் கண்ணும் கூறப்பெற்றுள.

இவற்றால் இக்குற்றியலிகரம் அரைமாத்திரை அளவினதென்பதும், இது தான் சார்ந்து வரும் முதலெழுத்துக்களின் பிறப்பியல்புகளையே தானும் பொருந்திப் பிறக்கும் என்பதும் யகரமெய்யின் முன் மகரத்தை ஊர்ந்து தனிமொழியிடத்தும் குற்றியலுகரம் கிரியநின்ற வல்லெழுத்துக்களை ஊர்ந்து புணர்மொழியிடத்தும் தோன்றி நிகழும் என்பதும், புணர்மொழியிடத்து வருங்கால் ஒரோவிடத்துத் தன் அரைமாத்திரையினும் சிறிது குறுகி ஒலிக்கும் என்பதும், வரிவடிவின்கண் மெய்யெழுத்துக்களைப் போலப் புள்ளிப் பெற்று நிற்கும் என்பதும் செய்யுளகத்து அசைக்குறுப்பாகி அசைத்து நிற்குங்கால் அலகிட்டு எண்ணப்பெறாமல் ஒற்றெழுத்தாகவே கொள்ளப் படும் என்பதும் புலனாம்.

இவற்றுள் முதன் மூன்று நூற்பாக்களால் இதன் ஒலியமைதியும் உருவும் தோன்றுமிடமும் பற்றுக்கோடும் (சார்பும்) நான்காவது நூற்பாவால் வரிவடிவமும் தன்மையும் ஏனையவற்றால் இதன் அளவும் பிறப்பியல்பும் கூறப்பட்டுள்ளமை தெளிவாம். இனி இந்நூற் பாக்களின் செம்பொருளையும் உரையாசிரியரின்மார் கருத்துக்களையும் முறையே காண்போம்.

'' குற்றிய லிகரம் நிற்றல் வேண்டும்
யாவென் சினைமிசை யுரையசைக் கிளவிக்கு
ஆவயின் வருஉம் மகரம் ஊர்ந்தே ''

பொருள்:— குற்றியலிகரம் மியா என்னும் உரையசைச் சொல்லின் கண் உள்ள யா என்னும் (சொல்லுறுப்பாக நிற்கும்) எழுத்தின்மேல் அவ்விடத்து வரும் மகர ஒற்றை ஊர்ந்து நிற்றல் வேண்டுமென்பர் இயல்நூலார்.

எடுத்துக்காட்டு ;— மியா

இச்சொல் (முன்னிலையசையாக வரும்) இடைச் சொல்லாதலின் தனித்தியங்க ஒல்லாமல் கேள், செல், வாழ், பார், உண் முதலிய முதனிலை ஏவல்வினைகளையடுத்துக் கேண்மியா, சென்மியா, வாழ் மியா, பார்மியா, உண்மியா, எனவரும். உரையாசிரியன்மார் இப்புணர்மொழிகளையே காட்டாகக் காட்டியுள்ளனர்.

மியா என்னும் இவ்வசைச்சொல் ஆய், மின் என்னும் ஏவல்வினை விகுதிகளின் பொருளைத் தன்னுள் அடக்கி ஒருமை வினை விகுதி போல நிற்றலின் உரையசைக்கிளவி என ஆசிரியர் விளம்பியுள்ளார் மகரம் பற்றுக்கோடு யகரம் சார்பாகலின் '' யாவென்சினைமிசை '' என விதந்தோதினர். '' நிற்றல் வேண்டும் '' வழிநூல் வாய்பாடு அன்றி ஒரு சொல் நீர்மைத்தாகக் கொண்டு 'நிற்கும்' எனப் பொருள் கோடலுமாம். சொல்லுக்கு உறுப்பாதலின எழுத்தைச் சினை என வழங்குதல் இவ்வாசிரியரியல்பு. ஓரெழுத்தொருமொழி யும் எழுத்தாகலின் அவற்றை நீக்குதல் இதன் பயன் என்க. கிளவிக்கு என்பது ஏழன் மயக்கம்.

உரையாளர் கூற்றுக்கள் :—

உரையசைக்கிளவிக்கு என்னும் தொடருக்கு '' உரையசைச் சொல்லாகிய மியா என்பதற்கு '' என இளம் பூரணர் கூறினர்.

கேள், செல் எனவரும் முதனிலைவினைகளை உரையசைக்கிளவி என வலிந்து கூறினர் நச்சினர்க்கினியர்.

வேங்கடராசுலு ரெட்டியாரவர்கள் இளம்பூரணர் கருத்தைத் தழுவி உரைகூறி இறுதியில், ''கேண்மியா என்பதன் உண்மை நிலையை ஆராயுமிடத்துக் கேணம் என்னும் சொல்லோடு யா என் னும் அசைச்சொல்லும் சேர யாவினுல் இகரந்தோன்றப் பெற்றுக்

கேண்மியா என்ருகியுள்ளது எனத் தெரிகிறது.'' எனக் கூறினர். பி. சா. சுப்பிரமணிய சாத்திரியார் அவர்களும் இளம்பூரணரையே சார்ந்துரைத்துள்ளார்,

நச்சர் கருத்தினைப் பின்னுரையாளர் இருவரும் பொருந்தா தென்று காரணங்காட்டி மறுத்துள்ளனர், அது பொருந்தாமை வெளிப்படை.

இனி ரெட்டியாரவர்கள் கேண்ம் சென்ம் என்பன யா என்னும் இடைச் சொல்லையடுத்துவந்தன என்றது பொருந்துமாறில்லை. என்னை கேண்ம் சென்ம் என்பவை செய்யும் என்னும் முற்ருதலன்றி ஏவல்வினையாகாமையின் என்க. மற்று உலக வழக்கில் நீவிர் உண்ணும் வாரும் கேளும் என வருதலின் உம் என்பதை ஏவல்வினை விகுதியாகக் கொள்ளலாமே எனின், காண்மின், சேர்மின், உண்மின் எனவரும் முன்னிலைப்பன்மை ஏவல்வினை விகுதிகளை ' இன் ' எனப் பிரித்தல் வேண்டும். மின் என்பதையே யாவரும் விகுதியாகக் கொண்டுள்ளனராதலின் அது பொருந்தாது.

இனி உலக வழக்கில் வரும் உண்ணும்வாரும் கேளும் என்னும் சொற்களுள் உள்ள விகுதி மின் என்பதன் மரூஉ வாதலன்றி 'உம்' ஈறன்று என்பதை ஓர்தல் வேண்டும். இது பற்றி எனது மூவிடப் பெயர் ஆய்வின்கண் தெளிய விளக்குவேன். அடுத்து

'' புணரியல் நிலையிடைக் குறுகலும் உரித்தே
உணரக் கூறின் முன்னர்த் தோன்றும் '' என்பது

இதன் பொருள் :— முற்கூறப்பெற்ற குற்றியலிகரம் சொற்கள் புணர்ந்தியங்கும் நிலைமைக்கண் தன் அரை மாத்திரையளயவிற் சிறிது குறுகி ஒலித்தற்கும் உரியதாகும் (அவ்வாறு ஒலித்தற்குரிய இடத்தினை) உணரக் கூறின் முன்னர் வரும் குற்றியலுகரப் புணரியலுள் விளக்கமாகும். என்பதாம்.

எ—டு :— ஆடியாது-கவடியாது-கொக்கியாது-தொண்டியாது எனவரும்.

இவற்றின் நிலைமொழிகள் முறையே ஆடு, கவடு, கொக்கு தொண்டு என்பனவாம் இவற்றை இதழ்விரியாமற் கூறி அரை மாத்திரையளவிற் சுருங்கி ஒலிப்பதைச் செவிகருவியான் உணர்க.

குறுகலும் என்ற எதிர்மறையும்மையான் தெள்கியாது. நாகியாது. வாகியாது, எனக்குறுகாது அரைமாத்திரையளவாய் வருதலே பெரும்பான்மையாம்.

இனி இக்குற்றியலிகரம் தன் அரைமாத்திரையளவினின்றும் குறுகும் எனக் கூருது விடின் உயிரினத்தைச் சார்ந்த இகரத்திற்கும் இக்குற்றியலிகரத்திற்கும் வேறுபாடு தெற்றெனத் தோன்ருதாம். அஃதாவது ஆடி, கவடி, தொண்டி, என்னும் (முற்று) இகர ஈற்றுச் சொற்கள் முறையேதிங்களையும் வெண்சிறுகடுகையும் ஓர் ஊரையும் குறிக்கும் பெயர்ச்சொற்கள். இவற்றை வினவுமிடத்து ஆடியாது கவடியாது தொண்டியாது, என்றே வரும். முன்னர்க்கூறிய (ஆடு + யாது = ஆடியாது எனவருவனவற்ருேடு வேற்றுமை புலப்படாதாம். அதனுன் பொருள் செவ்வனம் விளங்கா ஆதலின் இவற்றைச் சொல்லுமிடத்து இதழ் விரித்து ஒரு மாத்திரையளவு தோன்றக் கூறல் வேண்டும். அவற்றைக் கூறுமிடத்து இதழ் விரியாமல் அவற்றின் பொருள் ஐயமின்றி விளங்குமாறு அரை மாத்திரையினும் சிறிது சுருக்கிக் கூறல் வேண்டும். அரைமாத்திரையளவே கூறின் நிலைமொழி ஆடியா, ஆடா என்பது தெற்றெனப் புலப்படாதென்க இனி எழுத்து மொழிக்கண் (வரிவடிவில்) குற்றியலிகரத்திற்கு புள்ளி யிட்டு அமைத்தலின் ஐயந்தோன்ருதென்க.

மற்று நாகியாது வரகியாது, எஃகியாது எனவரும் புணர்மொழிகளுள் நிலைமொழி குற்றுகர ஈறு என்பது தெளிவாகலின் ஆண்டுத் தன் தன் அரைமாத்திரையே பெற்றுநிற்கும். என்னை? நாகி, வரகி. எஃகி என வரும் சொற்கள் இன்மையின் என்க. அதனுற்ருன் ஆசிரியர் " குறுகலும் " என எதிர் மறையும்மைதந்து கூறினுர் என்க.

உரையாளர் கருத்து :—

புணர் மொழியிடத்துவரின் (முழு) இகரம் அரை மாத்திரையாகும் என இளம் பூரணரும் இரெட்டியாரும் கூறினர். இவர்கள் குற்றியலிகரம் முதலெழுத்துக்கள் அல்லாததோர் தனித்தன்மையுடைய சார்பெழுத்தென்பதனை மறந்து உயிரினத்து இகரத்தின் குறுக்கமாகக் கருதியதன் விளைவே இத்தடுமாற்றம். மேலும் அதிகரித்து வரும் இலக்கணம் குற்றியலிகரம் என்பதையும் ஓராமல் முதலெழுத்தாகிய இகரத்தின் விகாரமாகக் கருதிவிட்டனர். நச்சினுர்க்கினியர் குற்றியலிகரம் புணர்மொழியிடத்தும் வரும் என உரைகண்டார். இவர்யாவரும் (பின்னைய இலக்கண நூலாரும்) குறுகலும் என்ற உம்மையைப் புணரியல் நிலையிடையும் எனப்பிரித்துக் கூட்டிப் பொருள்கண்டுள்ளனர்.

(தொடரும்)

பதிப்பாசிரியர் குழு.

1. திரு. **அரங்க. வே. சுப்பிரமணியம்**, பி. ஏ.,
அமைச்சர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்
பொழிற்றொண்டர்

2. திரு. **எஸ். நடராசன்**, எம். எல். ஏ., தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்

3. திரு. சித்தாந்த கலாநிதி ஔவை. சு. **துரைசாமிபிள்ளை**
தமிழ்ப் பேராசிரியர், மதுரை.

4. திரு. வித்துவான் க. **வெள்ளைவாரணனார்**,
துணைப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

5. திரு. வித்துவான். பி. **விருத்தாசலம்**, எம். ஏ.,
முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்.

6. திரு. வித்துவான். ச. **பாலசுந்தரம்**, துணை முதல்வர்
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்

7. திரு. வித்துவான். சி. **கோவிந்தராசன்**, பேராசிரியர்
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்

திரு. வித்துவான். **மீ ஞ. இராமதாசன்**,
முதனிலைத் தமிழாசிரியர்,
உமாமகேசுவர மேல்நிலைப்பள்ளி, கரந்தை, தஞ்சாவூர்

Regd. No. TN / TJ / 17.

தமிழ்த்தாய் வாழ்க

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

தமிழ்ப் பொழிலின் கையொப்பம்

		உள் நாடு	வெளி நாடு
1. ஆண்டு வரி	—	8-00	10-00
2. தனி இதழ்	—	0-60	

சங்க உறுப்பினர்

திங்கள் வரி	0—25 காசுகள்
ஆண்டு வரி	3—00
ஆயுள் வரி	100—00

சங்க நூல் நிலைய உறுப்பினர்

ஆண்டு வரி	1—00

விற்பனைக்குக் கிடைக்கும் நூல்கள் :

நெல்லை வருக்கக்கோவை	0—12
சித்தரந்தாதி	0—12
சுருதி வீணை	0—25
பரத சாத்திரம்	1—6
கவியரசு நினைவு மலர்	1—0
சிவமும் செந்தமிழும்	0—2
Garland of Tamil Poetry	2—0
கச்சிக் கலம்பகம் — (பூண்டி அரங்கநாத முதலியார்)	0—5
தொல்-பொதுப்பாயிரம் உரை	0—1
தமிழரசி குறவஞ்சி	0—6
யாழ்நூல் — சுவாமி விபுலானந்தர்	25—0
,, (அரை காலிகோ கட்டு)	27—0
கட்டுரைப்பொழில் (மணி விழா மலர்) சாதா கட்டு	12—00
ஷை காலிகோ கட்டு	15—00
மெய்ஞ்ஞானத்தின் கொழுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு (இரண்டாம் பதிப்பு)	1—00
நக்கீரர், ந. மு. வேங்கடசாமி நாட்டார். (இரண்டாம் பதிப்பு)	3—00
கபிலர் ,, ,,	4—00

ஆசிரியரும் வெளியிடுபவரும் திரு. அரங்க. வே. சுப்பிரமணியம், பி. ஏ., கரந்தைத் தமிழ்ச் சங்கம், கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர் - 613002. அச்சிடுபவர், திருமதி. S. நிர்மலா, அன்னை அச்சகம், 1734, காந்திசாலை தஞ்சாவூர் - 613002.